


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் வழி



**உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்**
**கடையரே கல்லா தவர்.**


**பொருள் :** இப்பொழுது கல்வியுடையவராயிருப்பவர், வறியவர் வாழ்க்கையில் எவ்வளவு வருத்தப்படுவார்களோ அவ்வாறு வருந்திக்கற்றவரேயாவர்; அவ்வாறு கல்லாதவர் இழிந்தவராவர். (395)

**தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறு மறிவு.**

**பொருள் :** மணலிடத்துள்ள கேணி தோண்டிய அளவுக்கு ஊறும்; அதுபோல மனிதருக்கு அறிவு கற்ற அளவினதாக ஊறும். (396)

---

# நற்சிந்தனை



*மறப்பேனோ குருநாதன் தன்னை*

**கும்மி**

கும்மியடி பெண்ணே கும்மியடி குரு
நாதனைப் பாடிக் கும்மியடி
இம்மை மறுமைக்கும் எங்களை யாட்கொண்ட
எழிலைப் பாடிக் கும்மியடி 01

சிவனொ ருத்தனே தெய்வமடி தோழி
சென்னியிற் கங்கை பாயுதடி
அவனி டத்தினிற் பெண்ணைநீ பாரடி
எண்ணியெண் ணிக்கடைத் தேறடி 02

அவனன்றி யொன்றும் இல்லையடி பெண்ணே
அங்கையி லங்கியெ ரியுதடி
அவன்ற னாகத்தில் நாகமடி பெண்ணே
அரையி லேபுலி யுடையடி 03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஞானச்சுடர்



வெளியீடு
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பழைய தேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 319



## 2024 பொருளடக்கம் ஆவணி


| | | |
|---|---|---|
| மனிதப் பிறவி | செ. சிவபாதம் | 01 - 03 |
| மது போதைப்பொருள்... | கு. சோமசுந்தரம் | 04 - 09 |
| பகவத்கீதையின் தத்துவம் | பூ. சோதிநாதன் | 10 - 13 |
| மதியாதார் முற்றம்... | மு. செல்லத்தம்பி | 14 - 16 |
| படங்கள் தரும் பதிவுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | 17 - 20 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 21 - 22 |
| சாதிகளும் சமயங்களும் | இராம ஜெயபாலன் | 23 - 27 |
| மரங்களும் மதங்களும் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 28 - 29 |
| இலக்கிய மரபுகளால்... | ச. சஜீலன் | 30 - 33 |
| மோகன தாரகை | கே.எஸ். சிவஞானராஜா | 34 - 35 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 36 - 39 |
| வாழ்த்துகின்றோம் | கி. குலசேகரன் | 40 - 41 |
| மனிதநேயம் தேயலாமா? | சி. நற்குணலிங்கம் | 42 - 44 |



**வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)**

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Printed & Published By:
Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai.
Selvasannithi, Thondaimanaru.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்
# ஆடி மாத வெளியீடு

## வெளியீட்டுரை:

ஞானச்சுடர் 319 ஆவது மலருக்குரிய வெளியீட்டுரையினை கொழும்பு பல்கலைக் கழகத்தில் மொழியியல்துறை விரிவுரையாளராக கடமையாற்றும் செல்வி குமாரசாமி தயாளினி அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தம் உரையின் ஆரம்ப நிலையாக சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றும் பலவிதமான பணிகளை எடுத்துக் கூறியதோடு அதில் குறிப்பாக மாதாந்த வெளியீடாக வந்து கொண்டிருக்கும் ஞானச்சுடர் வெளியீடானது மிகவும் காத்திரமான படைப்பாகவே மிளிர்கின்றது. இவ்வகையில் இம் மலர் தொடராக வெளிவருவதற்கு மலருக்குரிய ஆக்கங்களை வழங்குவோரை பாராட்டுவதோடு மாதாந்தம் மலரைப் பெற்று பயன்பெறும் வாசகர்களையும் நாம் பாராட்டித்தான் ஆகவேண்டும். வாசகர்கள் இல்லை எனில் எந்த மலராலும் பிரகாசிக்க முடியாது என்று கூறி இம் மலரானது தொடர்ந்து வெளிவர மலரின் வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்று பணிசெய்யும் அத்தனை உள்ளங்களையும் போற்றி சந்நிதி வேலவனது பேரருளால் மலர் தொடர்ந்தும் வெளிவர வேண்டும் என்று கூறி தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:

ஞானச்சுடர் ஆடி மாத மதிப்பீட்டுரையினை சைவப்புலவரும் ஆசிரியருமான திருமதி சசிலேகா ஜெயராஜன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தான் பாடசாலையில் கற்ற காலம் தொடக்கம் சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெறும் வாராந்த நிகழ்வுகளில் பங்குபற்றி தனது ஆன்மீகத் தேடலை பெற்றதன் பயனாக இடம்பெற்ற வெள்ளி நிகழ்வுகளில் சொற்பொழிவாளராகவும், இம் மலருக்குரிய வெளியீட்டுரையாளராகவும் காலப்போக்கில் ஆச்சிரமத்தோடு இணைந்ததன் பயனாக சுவாமி அவர்கள் மதிப்பீட்டுரை ஆற்றும் பணியையும் எமக்கு வழங்கி இருந்தார்கள்.

அதன் அடிப்படையில் ஒவ்வொரு வருடமும் வருகின்ற ஆடி மாத மலருக்குரிய மதிப்பீட்டுரையினை ஆற்றி வருகின்றேன். இச் செயற்பாட்டின் நிமித்தம் சுவாமி அவர்களுக்கும் சந்நிதி வேற்பெருமானுக்கும் நன்றிகூற கடமைப்பட்டிருக்கின்றேன் என்று கூறியதோடு ஆடி மாத மலரில் இடம்பெற்ற ஒரு சில ஆக்கங்களின் தரத்தை சபையில் உள்ள அடியார்களுக்கு விளக்கிக் கூறியதோடு தனது மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

இவ் உலகில் நாம் இருக்கும் சமூகம் தமது அனுபவங்கள், நமக்கு உலகத்தோடு உள்ள தொடர்பு இவை எல்லாமே இரு விதமாக தென்படுகின்றது.

ஒன்று இறைவன் நமக்குக் கொடுக்கும் அனுபவங்கள், நமக்கு அவர் தரும் அனுபவங்களின் மூலம் ஏற்படும் இறை நம்பிக்கை. மற்றது நமது ஆசைகளும் அகங்காரங்களும் அதன்மூலம் நமக்கு ஏற்படும் அனுபவங்கள், குழப்பங்கள் போன்றவை.

இறை நம்பிக்கை என்பது நாம் முழுமனதோடு அவன்பால் சரணடைவதே ஆகும். இச் செயல் மூலம் பல அடியார்கள் பயனடைந்துள்ளார்கள். இதை நாம் பல புராண இதிகாசங்களின் ஊடாக அறியக்கூடியதாகவுள்ளது. தற்கால சூழ்நிலைகளில் கூட இவ்வகையான செயற்பாடுகள் இலைமறை காய்போல நடந்தவண்ணமேயுள்ளது. இதனை எல்லோராலும் உணர்ந்துகொள்ள முடியாது. இறை தியானத்தில் திளைத்தவர் களாலேதான் உணரமுடியும்.

இவ்வகை செயற்பாடுகளிற்கு இறை வழிபாட்டுடன் கூடிய ஆலய வழிபாடு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஓர் அம்சம் ஆகும். நாம் ஆலயங்களுக்கு இறை வழிபாட்டிற்கு செல்லும்போது கூட இறைவனை வழிபடப் போகின்றோமே என்ற சிந்தனையின்றி எமது மனங்களை பிறவிடயங்களில் அலையவிட்டு செல்கின்றோம். இப்படி நாம் ஈடுபடுவது சாதாரணமான செயற்பாடாகவே போய்விட்டது. இதனால்த்தான் ஆலயங்களுக்குச் சென்றும்கூட எம்முடைய வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க நல்ல மாற்றமும் ஏற்படுவதில்லை. நாங்கள் எமது வழிபாட்டின்போது எமக்குரிய தேவைகளை இறைவனிடம் கேட்கின்றோமே தவிர வேறு யாருக்காகவோ அவர்களது தேவைக்காகவோ நாம் பிரார்த்தனை செய்வதில்லை. இதன்மூலம் நாம் எந்த அளவுக்கு சுயநலம் கொண்டவர்களாக இருக்கின்றோம் என்பதையே காட்டுகின்றது. நம்முடைய இவ்வகையான செயற்பாட்டில் நல்ல மாற்றங்கள் ஏற்படாத வகையில் நாம் ஆலயங்களுக்கு போவதாலோ, நாம் செய்யும் வழிபாட்டினாலோ ஒரு பயனும் இல்லை.

தற்கால சூழ்நிலையில் ஆலய வழிபாடு என்று சொல்லும்போது பெரும்பாலும் நமது இளம் சந்ததியினர் குறுகிய கண்ணோட்டத்தில்தான் ஆலய வழிபாட்டில் கலந்துகொள்கின்றனர். வழிபாட்டைவிட ஆலய சூழலில் இடம்பெறும் கேளிக்கை நிகழ்வுகளில் பங்குபற்றுவதில்தான் கூடிய கவனம் செலுத்துகின்றனர். இந்நிலை மாற வேண்டும். மாற்றப்பட வேண்டும். ஆலய வழிபாட்டின் மகத்துவத்தை உணர்வதற்கு நாம் அனைவரும் முயற்சிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பவளவிழா நாயகரே பல்லாண்டு வாழ்க

அன்னதானக் கந்தனாம்
சந்நிதியான் வாசலிலே
அவன் அருளால்
ஆச்சிரமம் அமைத்து
அடியவர் முதியவர்
பசிப்பிணி போக்கி
கூடவே ஆன்மிக
உணர்வதும் ஊட்டி
அறப்பணியாய்
உதவிகள் பல வழங்கி
சாப்பிட முன் ஒரு
சபை நடக்கிறது
சந்நிதி முருகன் அருளாலே
கூப்பிடு தூரத்திலிருந்தவன்
வழி நடத்த
மோகன் சுவாமியாய்
வந்துதித்த சேவைச் செம்மலுக்கு
இன்று பவளவிழா
கண்டுள்ளம் மகிழ
எத்தனை பணிகள் இங்கு
காலத்தின் தேவையறிந்து
ஞாலத்தில் எம்
பக்திச் சுவை பரப்ப
ஞானச்சுடர் வெளியீடு

பிரதி வெள்ளிக்கிழமை தோறும்
சைவ கலை பண்பாட்டுப் பேரவை
ஏற்பாட்டில் ஆன்மிக
அருளுரையுடனே
ஆதரவற்றவர்க்கான
ஆதாரமாய் உதவித் திட்டங்கள்
எவரால் இதுவும் முடியும்
இங்கு மட்டுமா
மலையகம் கதிர்காமம் என
எங்கும் சென்று உதவிடும்
எங்கள் வள்ளலுக்கு
இன்று அகவை 75
கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுடன்
இவற்றை தம்
உடமையாய் கொண்ட
வாழ்வியல் சொல் அல்ல
செயலே என்று வாழும்
எங்கள் மோகன் சுவாமிகள்
இன்னும் பல்லாண்டு
நலமோடு வாழ
நற்பணிகள் தொடர
சந்நிதியான் அருள்வேண்டி
இதயத்தால் வாழ்த்துகிறேன்
வாழ்க பல்லாண்டு.

-திரு வேல்நந்தன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**A. ஆனந்தகுமார்**

(லண்டன்)

**உரிமையாளர்**

(மதுரா நகைமாடம், யாழ்ப்பாணம்)

**Dr திருமதி பத்மராணி குகானந்தன்**

(பல்வைத்திய நிபுணர், அச்சுவேலி)

**S. உமாகாந்தன்**

(கொழும்பு)

**சி. சிவமூர்த்தி**

(ஸ்ரீ சிவாஞ்சனா நகைமாளிகை, யாழ்ப்பாணம்)

**அ. சிவகுமார்**

(யாழ்ப்பாணம்)

**A. நாகரெத்தினம்**

(கஜானன் அரைக்கும் ஆலை, நீர்வேலி)

**இ. குமாரசாமி J.P.**

(ஆசிரியர், பத்தமேனி, அச்சுவேலி)

**பொ. குமாரசாமி**

(சட்டத்தரணி, நவிண்டில்)

**திருமதி கௌரி சுரேசன்**

(ஆசிரியர், ஆவரங்கால்)

**கு. நிரோசன்**

(தொண்டைமானாறு)

**P. ஜெகதீசன்**

(மிருசுவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நா. சிவசிதம்பரம்**

(கோணாவளைலேன், கொக்குவில்)

**இராசையா தங்கவேல்**

(அச்சுவேலி)

**S. அருளையா**

(கொழும்பு)

**ச. பத்மநாதன்**

(தெற்குத் தோப்பு, புத்தூர்)

**க. தெய்வேந்திரம்**

(பண்டத்தரிப்பு)

**தே. தேவராஜேந்திரன்**

(திகிரி லேன், தும்பளை)

**திருமதி சி. செல்வநாயகி**

(கரவெட்டி)

**முத்து கணேஷ்**

(மஞ்சத்தடி, இணுவில்)

**K. கஜமுகன்**

(இராசவீதி, நீர்வேலி)

**செ. சிவலிங்கம்**

(மலர் வசந்தம், இணுவில்)

**N. ஜெயரட்ணராசா**

(பண்ணாகம், சுழிபுரம்)

**சி.து. கலைச்செல்வம்**

(பரமானந்தி அம்மன் கோவிலடி, இணுவில்)

**தலைவர்**

(வாழ்வகம், சுன்னாகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வை.ச. பரஞ்சோதி**

(சோதி ஸ்ரோர்ஸ், கோண்டாவில்)

**செ. வைகுந்தவாசன்**

(உடுப்பிட்டி)

**வை. செல்வராணி**

(உரும்பராய்)

**சி. முருகதாஸ்**

(சிறுப்பிட்டி தெற்கு)

**V.S. ஸ்ரீஸ்கந்தசாமி**

(தாளையடி)

**S. K. பஞ்சாட்சரம் ஆச்சாரியார்**

(மானிப்பாய் தெற்கு)

**இ. தயாபரன்**

(கோண்டாவில்)

**திருமதி தம்பிராஜா**

(திருநெல்வேலி)

**செ. தர்மலிங்கம்**

(சாவகச்சேரி)

**திருமதி தி. பரமேஸ்வரி**

(ஆனைக்கோட்டை)

**S. பொன்னம்பலம்**

(சுன்னாகம்)

**ப. திருக்குமரன்**

(அமுதசுரபி, கட்டுடை)

**சி. நவரெத்தினம்**

(ஆனந்தா வீதி, மானிப்பாய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சி. சுப்பிரமணியம்**

(சமரபாகு, உடுப்பிட்டி)

**சிறீ மாதவன்**

(கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)

**ரஞ்சினி ஸ்ரீஸ்கந்தராசா**

(யாழ்ப்பாணம்)

**ச. திவாகரன்**

(உரும்பராய் மேற்கு)

**க. சச்சிதானந்தன்**

(சந்தை வீதி, உடுப்பிட்டி)

**நா. மகேந்திரராசா**

(பிறேம மகால், வல்வெட்டி)

**சு. சிவராசா**

(கொக்குவில்)

**நல்லதம்பி குமரவேள்**

(இணுவில்)

**கா. அருளானந்தன்**

(அராலிவீதி, சங்கானை)

**பத்மநாதன் குணசுந்தரி**

(ஆதிகோயிலடி, வல்வெட்டித்துறை)

**ஆசைப்பிள்ளை சுப்பிரமணியம்**

(ஆதவன் அரிசி ஆலை, அச்சுவேலி)

**ச. மார்க்கண்டு**

(ஊரெழு மேற்கு)

**திருமதி கமலஹாசன் மஞ்சுளா**

(வல்வெட்டி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதப் பிறவி

– திரு செ. சிவபாதம் அவர்கள் –

ஔவையார் "அரிது அரிது மானிடப்பிறவி" என்றும் தாயுமானவர் "எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான் அரிது அரிது காண்" என்றும் கூறுவதிலிருந்து மானிடப் பிறவி மற்றைய பிறவிகளிலும் பார்க்க நல்ல பிறவி என நாம் அறியக்கூடியதாகவுள்ளது. இதனை நாம் பின்வருமாறு காண்போம். நால்வகைத் தோற்றம் ஏழ்வகைப் பிறப்பு எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதங்களுக்குள்ளே பல பிறவிகள் உண்டு. இதை மாணிக்கவாசக சுவாமிகள் சிவபுராணத்தில் பின்வருமாறு கூறுகிறார். புல்லாகிப் பூடாய் புழுவாய், மரமாய், பல் மிருகமாகி, பறவையாய், பாம்பாய், கல்லாய், மனிதராய், பேயாய், கணங்களாய், வல்லசுரராய், முனிவராய், தேவராய் என்று பாடுகிறார். இப் பிறவிகளுக்குள்ளே ஒரு உயிர் மனிதப் பிறவியில் வந்து பிறத்தல் மிகவும் அருமையாம். இது பெரிய கடலை கையினால் நீந்திக் கரையேறியவன் செயல் போன்றதாகும். இப்படியாக மனிதப் பிறவியை எடுப்பவர்கள் வாழ்கின்ற நாடுகளுக்குள்ளே வேதாகமங்கள் ஓதப்படாத நாட்டிலே பிறக்காமல் இவை ஓதப்படும் உத்தம நாட்டில் பிறத்தல் மிக்க புண்ணியமாகும். இத்துடன் இப்பூமியில் தாழ்ந்த சாதியில் பிறவாது சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவற்றைக் கடைப்பிடித்து தவம் செய்வதற்குரிய நல்ல சாதியில் பிறந்து புறச்சமயங்களில் சேராது வாழ்தல் பெரிய புண்ணியமாகும்.

பாடல்: சிவஞானசித்தியார் 180ஆவது

நரர் பயில் தேயம் தன்னில் நான்மறை பயிலா நாட்டில்
விரவுதல் ஒழிந்து தோன்றல் மிக்க புண்ணியத்தால் ஆகும்
தரையினில் கீழைவிட்டுத் தவம் செய் சாதியினில் வந்து
பரசமயங்கள் செல்லாப் பாக்கியம் பண்ண ஒண்ணாது.

மனிதன் ஆறு அறிவைப் பெற்றுள்ளான். வேறு சில உயிர்கள் ஒரு அறிவையும், சில இரு அறிவையும், சில மூன்று அறிவையும் சில நான்கு அறிவையும் சில ஐந்து அறிவையும் பெற்றுள்ளது. மனிதர்களாகிய நாம் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகள் மூலம் பரிசம், ரசம், உருவம், கந்தம், சத்தம் ஆகிய ஐந்து அறிவு களுக்கும் அப்பால் பகுத்து அறிவதற்குரிய மனத்தை உடையவன்தான் மனிதன். (நாம் செய்யும் இச்செயல் நல்லதா கெட்டதா என்று பலருடன் சிந்தித்து அறிவது) எனவே பகுத்தறி கின்ற மனத்தால் மற்றைய உயிரினங்களுக்கு இல்லாத மனமும் முன்னேற்றமும் எமக்கு எதற்காக எப்படிக் கிடைத்தது என்பதை நாம் மனத்தால் நினைக்கக் கூடியதாகவுள்ளது.

*மற்றவர்களைச் சந்தோசப்படுத்துபவனே உண்மையில் சந்தோசப்படுகிறான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயால் புகழ்ந்து சொல்லக்கூடியதாகவுள்ளது. உடலால் செய்யக்கூடியதாகவுள்ளது. மனிதப் பிறவியின் நோக்கம் பரமுத்தி அடைவதேயாகும். சிவபெருமான் சிதம்பரத்திலுள்ள கனகசபையில் மனித உருவத்தில் ஆனந்தக் கூத்தாடுகிறார். இக்கூத்து சிவபிரான்தான் ஐந்தொழில்களையும் செய்பவர் என்பதைக் காட்டுகிறது. இத் திருக்கூத்தை மனிதர்களாகிய நாம் பார்த்து வணங்க முடியுமென்றால் மானிடப்பிறவியும் சிறந்த ஒரு பிறவியாகும். இதனை திருநாவுக்கரசு நாயனார் பின்வருமாறு பாடுகிறார்.

தேவாரம்

குனித்த புருவமும் கொவ்வை செவ்வாயில் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

மனிதர்களின் பிறவியாகிய நோயை நீக்குவதற்காக பசுவிலிருந்து எடுக்கும் பால், தயிர், நெய், கோமயம், கோசலம் என்னும் பஞ்ச கௌவ்வியங்களையும் அபிஷேகமாக ஏற்றுக்கொள்ளும் சிவபிரானை நாம் திரிகரணங்களால் வணங்கவேண்டும். இவ்வழிபாடு மற்றைய பிறவிகளில் செய்யமுடியாத காரணத்தால் மானிடப்பிறவி ஒரு நல்ல பிறவியாகும். பிரம்மா, விஸ்ணு முதலாகச் சொல்லப்படும் பதமுத்தியிலுள்ள தேவர்களும் தங்கள் தங்கள் உலகங்களில் சிவபிரானை வழிபட முடியாமல் இந்த மண்ணுலகத்துக்கு வந்து சிவனை வழிபடுகின்றனர். இதனை சிவஞான சித்தியார் பின்வருமாறு கூறுகிறது.

பாடல்

மானுடப் பிறவிதானும் வகுத்தது மனம் வாக்கு காயம்
ஆனிடத்து ஐந்தும் ஆடும் அரன் பணிக்காக அன்றோ
வானிடத்தவரும் மண்மேல் வந்து அரன்தனை அர்ச்சிப்பர்
அந்தோ ஊன் எடுத்து உழலும் ஊமர் ஒன்றையும் உணரார்.

இதனை மாணிக்கவாசக சுவாமிகள் பாடிய திருப்பள்ளியெழுச்சியில்,

பாடல்

புவனியில் போய் பிறவாமையில் நாள் தாம்
போக்குகின்றோம் அவமே. இந்தப் பூமி
சிவன் உய்யக் கொள்கின்ற ஆறு என்று நோக்கி.

திருநாவுக்கரசு நாயனார் திருஅங்கமாலை என்னும் திருப்பதிகத்தில் மனிதர்களாகிய எங்கள் உடல் உறுப்புக்களைப் பார்த்து பின்வருமாறு பாடுகிறார்.

தலையே நீ வணங்காய் - தலை மாலை தலைக்கணிந்து
தலையாலே பலி தேரும் தலைவனை தலையே நீ வணங்காய்.

கண்காள் காண்மின்களோ - கடல் நஞ்சுண்ட கண்டன் தன்னை
என்தோள் வீசி நின்றாடும் பிரான் தன்னை கண்காள் காண்மின்களோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவிகாள் கேண்மின்களோ - சிவன் எம்மிறை செப்பவள
எரிபோல் மேனிப் பிரான்திறம் எப்போதும் செவிகாள் கேண்மின்களோ.

மூக்கே நீ முரலாய் - முதுகாடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை மூக்கே நீ முரலாய்.

வாயே வாழ்த்து கண்டாய் - மத யானை யுரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத்தாடும் பிரான்தன்னை வாயே வாழ்த்து கண்டாய்.

நெஞ்சே நீ நினையாய் - நிமிர் புன்சடை நின்மலனை
மஞ்சாடும் மலை மங்கை மணாளனை நெஞ்சே நீ நினையாய்.

கைகாள் கூப்பித் தொழீர் - கடிமாமலர் தூவிநின்று
பைவாய் பாம்பரையார்த்த பரமனை கைகாள் கூப்பித் தொழீர்.

ஆக்கையாற் பயனென் - அரன் கோயில் வலம் வந்து
பூக்கையாலட்டிப் போற்றி யென்னாதவிக் ஆக்கையாற் பயனென்.

ஊற்றாராருளரோ - உயிர் கொண்டு போம் பொழுது
குற்றாலத்துறை கூத்தனல்லால் நமக்கு உற்றாராருளரோ.

இறுமாந் திருப்பன் கொலோ - ஈசன் பல்கணத் தெண்ணப் பட்டுச்
சிறுமானேந்திதன் சேவடிக் கீழ்சென்றங்கு இறுமாந்திருப்பன் கொலோ.

தேடிக்கண்டு கொண்டேன் - திருமாலோடு நான்முகனும்
தேடித் தேடோணாத் தேவனை என்னுள்ளே தேடிக் கண்டுகொண்டேன்.

நாம் முற்பிறப்பில் செய்த தவத்தின் பயனாக திருநாமங்களை உச்சரித்து சிவனை வழிபடக்கூடிய மானிடப் பிறவியை எடுத்திருக்கிறோம். இதனை தேவாரம் பின்வருமாறு கூறுகிறது.

தேவாரம்

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே யிருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும் வழிபடுமதனாலே.

நாம் எடுத்த பிறவியின் நோக்கத்தை செய்து முடிப்பதற்கு எல்லோரும் முயல வேண்டும்.

*நல்லெண்ணம் கொள்வது இறைவழிபாட்டின் ஓர் அங்கமாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மது, போதைப்பொருள் பாவனை, புகைத்தல் தவிர்த்தல் நலம்

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

மது மற்றும் போதைப்பொருட் பாவனை, புகைத்தல் என்பன தற்காலத்தில் உலகளாவிய நிலையில் ஒரு பெரும் சமூகப் பிரச்சினையாக வடிவெடுத்துள்ளது. இளைஞர்கள், மாணவப் பருவத்தினர் முதல் அனுபவங்கள் நிறையப்பெற்ற மூத்தோர், முதியோர் வரை பெரும்பாலோர் மது மற்றும் போதைப்பொருட் பாவனைக்கு அடிமையாகி வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. மனித நடத்தைகள், மற்றும் அவர்களின் நடை, உடை, பாவனைகள், பழக்கவழக்கங்கள் என்பன பெரும்பாலும் தனிமனித, குடும்ப மற்றும் சமுதாய நலன்களுக்குக் குந்தகம் விளைவிப்பதாக அமைகின்றபோது; சமூக நலன், குடும்ப அமைதி, ஒழுங்கு கட்டுப்பாடு என்பனவற்றை அச்சுறுத்துகின்ற நிலையில் அவை சமூகப் பிரச்சினைகளாக உருவெடுத்து விடுகின்றன. அந்தவகையில் மது, மற்றும் போதைப்பொருட் பாவனை, புகைத்தல் என்பன தற்காலத்தில் குடும்ப மற்றும் மனித சமுதாயப் பிரச்சினைகள், பொருளாதாரப் பிரச்சினைகளின் ஊற்றுக்கண்கள் ஆகவும் ஊக்கிகளாகவும் விளங்குகின்றன.

கொலை, களவு, கள் (மது), காமம், குருநிந்தை என்னும் ஐந்தும் பஞ்சமா பாதகங்கள் என எமது ஆன்றோர் மற்றும் இந்துமத அறநூல்கள் குறிப்பிட்டு அவற்றை விலக்கி வாழ்வதே அறம் சார்ந்த மானுடம் போற்றும் ஆன்மிக வாழ்வு எனக் கூறி எம்மை நல்வழிப்படுத்தியுள்ளனர். அவற்றை மதித்து, வாழ்வில் அநுசரித்து வாழ்ந்தால் உண்டு உயர் வாழ்வு; மறுத்தால் அல்லல்கள், தொல்லைகள், அவலங்கள் நிறைந்த அவல வாழ்வு தவிர்க்கமுடியாததாகி விடுகின்றது.

நம் முன்னோர்களால் மது என்ற சொல்லை மற்றைய நான்கு பழிபாவச் செயல்களுக்கும் நடுநாயகமாக வைக்கப்பட்டுள்ளமை சிந்திக்கற்பாலது. காரணமின்றிக் காரியம் இல்லை. காரியம் செயல் ஆகின்றது. கள் என்பது மதுவைக் குறிக்கின்றது. அதனால் மதுபானம் எனப்படுகிறது. போதை தருகிறது. இன்றைய காலகட்டத்தில் கள் என்ற சொல், மது உள்ளிட்ட போதைப் பொருள்கள் அனைத்தையும் குறிப்பதாக எடுத்துக் கொள்ளலாம். புகைத்தலும் போதையைத்தான் ஏற்றுகின்றது. அந்த வகையில் கொலை, களவு, கற்பழிப்பு என்னும் பாலியல் வல்லுறவு, மற்றும் பொய்யுரைத்தல் ஆகிய எல்லாவிதமான அதிபாதகச் செயல்களும் குற்றங்களும், மது போதைப்பொருள் பாவனை ஆகியவற்றையே ஊற்றுக்கண்ணாகக் கொண்டுள்ளன. அத்துடன் உந்துசக்தியாகவும் அவை அமைகின்றன. இவ்வுண்மையை, நம் முன்னோர்கள் தீர்க்க தரிசனமாக உணர்ந்து, "கள்" என்பதை; பஞ்சமா பாதகங்களின் வரிசையில், நடுவில் வைத்து போதையின் கொடுமையையும் கடுமையையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித குலத்திற்கு உணர்த்தியுள்ளனர். இதனை உணர்ந்து அதன்படி ஒழுக மறுப்பவர்கள் வாழ மறுப்பவர்கள் ஆகிவிடுகின்றனர். அத்துடன் தம்மைச் சார்ந்துள்ள குடும்பத்தவர்களையும் நிர்க்கதிக்கு உள்ளாக்கி விடுகின்றனர்.

"கொடிது கொடிது வறுமை கொடிது" என்று கூறிய ஒளவையார், "கொடிது கொடிது மது பாவனை கொடிது" என்ற வரியையும் அந்தப் பட்டியலில் இணைத்திருப்பார். அடுத்து அதே வரிசையில் மிகக் கொடியது போதைப்பொருள் பாவனை என்பதை இணைத் திருப்பார். ஆனால் அப்பொழுது போதைப்பொருட் பாவனை இன்றைய அளவிற்கு இணையாக இருந்திருக்கவில்லைப்போலும். ஒளவையார் பாடலடியிலிருந்து அறியக்கூடியதாக உள்ளது.

எந்தச் செயலுக்கும் அது கெட்டதோ, நல்லதோ அச் செயலுக்கேற்ற விளைவு நிச்சயமாக உண்டு. "தினை விதைத்தவன் தினை அறுப்பான்; வினை விதைத்தவன் வினை அறுப்பான்" என்ற ஆன்றோர் வாக்கு அதனை எப்பவோ உணர்த்திவிட்டது.

மது, போதைப் பொருட் பாவனை, புகைத்தல் என்பவற்றில் ஈடுபாடுகொள்வதற்கான காரணங்களைப் பின்வருவனவற்றுள் அடக்கலாம். அவையாவன; ஆசை, பிறரின் தூண்டுதல், சந்தர்ப்பம் சூழ்நிலை, கெட்ட நண்பர்களுடன் சகவாசம் வைத்தல், பிரச்சினைகள் மற்றும் வாழ்க்கையில் கணவன் மனைவி ஆகியோரிடையே நல்லுறவு இல்லாமை; பெற்றோர் பிள்ளைகளுக்கு நல்வழி காட்டுவதில் அசிரத்தை, வாழ்க்கையில் எதிர்கொள்கின்ற ஏமாற்றங்கள், தோல்விகள், விரக்திகள் மற்றும் கஷ்ட நஷ்டங்கள், கவலைகள் அவற்றால் ஏற்படுகின்ற துன்பம், துயர்கள், மன அழுத்தங்கள் என்பவற்றைக் கூறலாம். அவற்றிற்குப் பரிகாரமாக மதுபாவனையில் ஈடுபடுவது குளிக்கப்போய் சேறு பூசுவதை ஒக்கும்.

சிலர் வேடிக்கைக்காகவும் (முஸ்பாத்தி), பொழுதுபோக்குக்காகவும், நட்பினைப் பேணுவதற்காகவும் நண்பர்களின் வற்புறுத்தலுக்காகவும் குறிப்பாக வாலிபப் பருவத்தினர் மது, போதைப்பொருட் பாவனை மற்றும் கஞ்சா, சிகரெட்டு, பீடி புகைத்தல் என்பவற்றில் ஈடுபாடு கொள்கின்றனர். பின்னர் அப்பழக்கம் இறப்புவரை தொடர்கிறது. போதை ஏறாமல் உயிர் வாழமுடியாத நிலைமைக்கு ஆளாகிவிட்டதாகப் புலம்புகிறார்கள். ஈற்றில் மதுவே, போதையை ஏற்றி அதன் விளைவாக உயிரையும் உறிஞ்சிக் குடித்து விடுகிறது. அது மட்டுமல்ல குடிகாரன் குடும்பம் என்ற அவப்பெயரும் நிலைத்து விடுகிறது.

போதைப் பொருள்கள், ஆட்கொல்லி என்பதையும் அவற்றின் பாவனை தற்கொலைக்கு இணையானது என்பதையும், ஏனோ உணர்ந்துகொள்ள மறுக்கிறார்கள் என்பதுதான் புரியாத புதிராக உள்ளதுடன் விசனத்தையும் தருகிறது. பகுத்தறிவு பயன்படுத்தப்படாதபோது; ஐயறிவுள்ள விலங்குநிலைக்குக் கீழிறக்கப்பட்டு விடுகிறான். எது சரி, எது பிழை என்பதைப் பிரித்தறிய முடியாத நிலையில் மனிதன் என்ற உயர் நிலையிலிருந்து, மிருகம் என்ற தாழ்நிலைக்கு வகுப்பிறக்கம் செய்யப்பட்டு விடுகிறான்.

புகைத்தல் தனக்குத்தானே வைக்கும் "கொள்ளி" என்றால் மிகையாகாது. புகைப் பவர்களுக்கு மட்டுமல்ல; அவர்களுடன் இணைந்து வாழ்கின்றவர்களின் உடல், உளநலமும் பாதிக்கப்படுகிறது. சூழல் மாசடைகிறது. சமுக நல உணர்வு சிறிதேனும் இருந்தால், மக்கள்

*மேன்மையை நாடிச் செல்பவனுக்கு சிறு குறைகளும் இருக்காது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடும் இடங்களிலும் வீதிகளிலும் மற்றும் பொது இடங்களிலும் சுருட்டு, பீடி, சிகரெட் என்பவற்றைப் புகைத்துத் தள்ளுவார்களா?

"மதுவை நீ குடிக்க, அது உன் உயிரைக் குடிக்கும்" "இலவசமாகக் கிடைக்கிறது என்றாலும் வேண்டாம், உன்னைக் கொல்லும் நஞ்சு, மது" தற்காலத்தில் உருவெடுத்துள்ள கஞ்சா, அபின், ஐஸ் போதைப் பொருள்கள் என்பவற்றிற்கும் அக்கூற்று பொருந்தும். இவ்வறிவுரையைக் கேட்டு, அதனை அநுசரித்து வாழ்ந்தால் வாழ்வு நலம்பெறும். உதாசீனம் செய்தால், தவிக்க நேரிடும். மரணமும் விரைவில் வந்து உயிரைப் பறிக்கும்.

மது மற்றும் போதைப்பொருட் பாவனை மனிதனை மிருகமாக்கும்; பகுத்தறிவைப் பறித்துவிடும்; குற்றங்கள் புரியவைக்கும்; உழைத்த பணத்தை ஊதாரித்தனம் செய்யத் தூண்டும். இழப்புக்கள் பணம், பொருள், நிலம் புலங்கள், பரம்பரைச் சொத்துக்கள் மட்டுமல்ல; மானம், குலப்பெருமை, கல்வி, வண்மை அனைத்தும் போதைப்பொருள்கள் பாவிப்பதால் இழந்துவிட நேரிடும். அப்படிப்பட்ட மது மற்றும் போதைப்பொருட் பாவனை தேவைதானா? என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இறந்த பின்னரும் குடிகாரன், குடுக்காரன் என்ற பட்டங்களும் நிலைத்துநிற்கும். சந்ததியினருக்கும் அவமானம் மற்றும் அவமரியாதையைத் தேடிக்கொடுத்த சிறுமைக்கும் உரியவராகி விடுவர்.

தற்காலத்தில் வாகன விபத்துக்கள் மற்றும் வீதி விபத்துக்கள் தினசரி நடைபெறு கின்றன. அவற்றால் ஏற்படும் உயிரிழப்புக்கள், உடல் ஊனங்கள், மற்றும் குடும்பங்களுக்கு ஏற்படும் நஷ்டங்கள், துன்பதுயர்கள் அனைத்துக்கும் பிரதான காரணமாக அமைவது, குடிபோதையில் வாகனங்களை ஓட்டுதல் என்பது ஆய்வுகள்மூலமும் நேரடி அநுபவங்கள் மூலமும் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

"மதுவே பாவங்களுக்கெல்லாம் தாய் தந்தை. குடியே குடியைக் கெடுக்கும்; மது அதைப் பாவிப்பவனையே கொல்லும்; மது உறவினை அழிக்கும் ஈற்றில் தனிமையாக்கும்; மது பழி செய்யும்; குழப்பங்களை உண்டாக்கும். கொலையும் செய்யும்; மதுவை விடக் கொடியது வேறொன்றுமில்லை என்கிறார் ஒரு பெரியவர்.

"நாளை முதல் குடிக்கமாட்டேன், சத்தியமெடி தங்கம்; இன்னிக்கு இராத்திரிக்குத் தூங்கவேணும் ஊத்திக்கிறேன் கொஞ்சம்" குடிகாரர்கள் தினசரி எடுக்கின்ற சங்கல்பம்தான் இது. ஆனால் என்றுமே எவராலும் நிறைவேற்றியதாக அறியவில்லை. "குடிகாரன் பேச்சு விடிஞ்சாலே போச்சு" என்பது பொருள் பொதிந்த கூற்று.

மது, போதைப்பொருள் பாவனை மற்றும் புகைத்தல் என்பன பாவனையாளருக்கும்-நுகர்வோருக்கும் தனிப்பட்ட முறையில் அவர்களின் உடல்நலம், மனநலம், உயிர்நலம், மனித உறவு நலம், பொருளாதார நலம் மற்றும் கலை, கலாசார, பண்பாட்டு நலம், ஒழுக்கநலம், குடும்ப கௌரவ நலம் என்பன யாவும் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி விடுகின்றன. அப்படிப்பட்ட மது, போதைப்பொருட் பாவனைக்குள்ளாகிவிட்ட ஆடவர்களை "இல்லாளும் வேண்டாள், மற்று ஈன்றெடுத்த தாய் வேண்டாள்; செல்லாது அவன் வாயிற் சொல்" என்கிறார் ஔவையார் என்னும் புலவர். எவர் வெறுப்புற்றுத் தள்ளி வைத்தாலும் கடைசிவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுக்காது அன்பு பாராட்டுகின்ற அன்புத் தாயும் அருமையான மனைவியும்கூட, மது போதைப்பொருளுக்கு அடிமையான கணவன்மாரையும் பெற்ற பிள்ளைகளையும் வெறுத்து ஒதுக்கிவிடுவார்கள்.

நம்பிக்கை, நாணயம், செல்வாக்கு, நேர்மை, நிதானம், மதிப்பு அனைத்தும் மதிப்பிறக்கம் பெற்றுவிடுகின்றன. நாணம், வெட்கம், ரோசம், கூச்சம், அச்சம் அனைத்தும் போதையில் மிதப்பவர்களிடமிருந்து விலகி வெகுதூரம் சென்றுவிடுகின்றன. அத்தகையவர் களுடைய பேச்சு நடை, உடை, பாவனை, போக்குவாக்கு, நடத்தைகள். இந்நிலைமையினை எடுத்துக் காட்டுவனவாக உள்ளன. "கைப்புண்ணுக்குக் கண்ணாடி தேவையா?" என்னும் வினாவுக்கு விடை தேவையில்லை என்பதாகும்.

"துஞ்சினார் செத்தாரின் வேறல்லர், எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண்பவர்"

-திருக்குறள் 926.

நித்திரை செய்பவர், இறந்தவரை விட வேறுபட்டவர் அல்லர். அவ்வாறே மது மற்றும் போதைப்பொருள் பாவிப்பவர்களும் சுய அறிவு மயங்குதலால், நஞ்சுண்பவரே ஆவர். இது இக்குறள் தரும் கருத்து. எனவே மது மற்றும் போதைப்பொருள் பாவனையாளர் இறந்தவர்களேயாவர். அவர்கள் வாழும் சமுதாயத்தில் மதிப்பு இழந்து விடுவர்.

தற்காலத்தில் சமூகத்தின் உயர் மட்டங்களில் ஏன் நடுத்தர மட்டங்களில்கூட ஒரு சிலர் தங்கள் இல்லங்களில் நடைபெறுகின்ற மங்கல வைபவங்கள் - திருமணம் - பிறந்தநாள் விழா - பூப்புனித நீராட்டுவிழா - புதுமனை புகுவிழா போன்றவை சிறப்படையும் என்ற தவறான நோக்கில் பிரத்தியேகமான ஓர் இடத்தில் வைத்து, மதுப்பிரியர்களுக்கு மதுபானம் பரிமாறப்படுகின்றது. விருந்தினர் சிலர் இதனை ஒரு நவநாகரிகமாகக் கருது கின்றனர்.

துக்கம், சோகம், கவலை நிறைந்த மரண வீடுகளில்கூடச் சிலர் துக்கத்தை மறக்க என்ற சாட்டில் மதுபானம் பரிமாறிக் குதூகலிக்கிறார்கள். எட்டுக்குப் படைக்கிற சாட்டில் பலவிதமான போதைப் பொருட்கள் என்பவற்றை ஏனைய உணவுகளுடன் படைத்து, அதன்பின் நண்பர்கள், உறவினர்களுடன் தாமே அவற்றை உண்டும் பருகியும் குதூகலிக் கிறார்கள். அவ்வாறு செய்தல், சைவசமயக் கொள்கைகள் மற்றும் சமூக விழுமியங்களுக்கு முரணானது என்பதை அவர்கள் உணர்வதில்லை. இது இன்றைய துர்ப்பாக்கிய நிலை. "விபரீத புத்தி, நாச காலம்" என்பது ஆன்றோர் வாக்கு. அது என்றும் பொய்ப்பதில்லை. திருக்குறள் மற்றும் அறநூல்களுக்கு "பொய்யா மொழி" என்ற மற்றொரு நாமமும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

போர் மற்றும் உலகளாவிய யுத்தங்கள்; கொள்ளை நோய்கள்; பஞ்சம், இயற்கை அனர்த்தங்கள், எதிர்பாராத இடப்பெயர்வுகள் என்பவை எதிர்பாராமல் நிகழ்கின்றன. அந் நிகழ்வுகள் மனித சமுதாயத்திற்கு ஏற்படுத்துகின்ற அழிவுகள், இழப்புக்களைவிடப், பன்மடங்கு கஷ்டங்கள், கொடுமைகளை மதுபானம் மற்றும் போதைப்பொருள் பாவனை,

*வாழ்க்கையின் ஏற்றத்தாழ்வுகளை நிதானத்துடன் எடுத்துக்கொள்ள வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகைத்தல் என்பன அவற்றைப் பாவிப்பவர்களுக்கு வழங்குகின்றன. இதனை நன்கு அறிந்தவர்கள் தங்கள் எதிரிகள் என்று கருதப்படுபவர்களை அழித்தொழிப்பதற்கு மாற்று வழியாக போதைப் பொருட் பாவனையை அவர்கள் மத்தியில் தாராளமயமாக்கும் முயற்சி களில் ஈடுபட்டு வருவதாக அறியப்படுகிறது. குறிப்பாகப் பாடசாலை மாணவர்கள், பல்கலைக் கழக மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் ஆகியோரை இலக்கு வைத்தே அவர்களை சிக்கவைத்து, அவர்களின் எதிர்கால சுபீட்சத்தை அழித்துவிடுவதற்கென்றே இச்சதிவலை வீசப்படுவதாக ஒரு கருத்து நிலவுகிறது.

"வெள்ளம் வருமுன் அணை கட்டவேண்டும்" ; "நோய்க்கு இடங்கொடேல்" போன்ற மகுட வாசகங்கள், அறவுரைகள், அறிவுரைகள் நம் முன்னோர் எமக்களித்த அரும் பெரும் முது சொத்துக்கள் - முதுசம்கள் ஆகும். அவற்றின் இன்றியமையாத் தேவை, இன்று எம்மால் உணரப்படவேண்டியது மிக அவசியமும் அவசரமுமாகும். தாமதித்தால் பின்னர் தவிக்க நேரிடும்.

பிள்ளைகள், இளையோர் ஆகியோரைச் சமூகமயப்படுத்தியும் ஆன்மீகமயப்படுத்தியும் கலாசாரமயப்படுத்தியும் அதன்மூலம் அவர்கள் வாழுகின்ற சமூகத்தினருடன் ஒத்தும் பொருந்தியும் இணைந்தும் உலகத்தவரோடு ஒட்டியும் இம்மண்ணில் வாழும் நெறியறிந்து, நல்லவண்ணம் வாழச் செய்யவேண்டிய பொறுப்பும் கடமையும்; குடும்பம், சமூகம், பாடசாலை கள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், கல்வி நிறுவனங்கள், ஆலயங்கள், வணக்கத் தலங்கள், சனசமூக முன்னேற்ற நிலையங்கள், சமூக நலன்புரி நிறுவனங்கள் என்பவற்றிடம் உள்ளது. அவை கூடுதலாகக் கருத்தைச் செலுத்த வேண்டிய பணி; இளைஞர்களைச் சமுதாயப்படுத்தி வாழும் சமூகத்துடன் இணங்கி வாழச் செய்தல் என்பதை கருத்தில் கொண்டு, தொண்டாற்றி இன்பம் காணுதல் ஆகும். சேவைகளில் எல்லாம் மகத்தான சேவை அதுவேயாகும்.

வழிகாட்டல், புத்திமதி கூறுதல், வாழ்க்கையில் வாழ வழி தெரியாமல் தடுமாறுபவர் களுக்கு நல்வழி காட்டுதல், அவர்களை ஈடேற்றுதல் என்பன சேவைகளுள் தலையாய சேவை. காசு பணம் தேவையில்லை. மனமுண்டானால் இடமுண்டு. அத்துடன் புத்திமதி கூறும் பெரியோர்கள் தாமும் முன்மாதிரியாக நடந்தும் காட்டவேண்டும். ஊருக்குபதேசம் செய்வதோடு நிறுத்திவிடலாகாது. அது பெருங் குற்றம். அதுமட்டுமல்ல கேலிக்கும் இடமாகிவிடும்.

பாடசாலைக் கலைத்திட்டத்தில் விழுமியக்கல்வி, ஒழுக்கநெறிக் கல்வி, ஆன்மீகக் கல்விக் கூறுகள் கட்டாயமாக இடம்பெற வேண்டியது அவசியமும் அவசரமுமாகும். அத் துடன் இணைப்பாடவிதான நிகழ்ச்சிகளில் மாணவர்களைப் பங்கேற்கச் செய்வதன்மூலமும் ஒழுக்கம், பண்பாடு மற்றும் நன்னடத்தைப் பண்புகளைப் புகட்டலாம். இளையோர்கள் சுயகட்டுப்பாடு, சுயமதிப்பு, சுயகௌரவம் என்பவற்றை சுயமாகவும் உள்ளுணர்வாகவும் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் தகுந்த சூழலை அமைத்துக் கொடுக்கவேண்டியது சமூகத்தினர், பெரியோர், ஆசிரியர்கள் ஆகியோரின் கடமையாகும். அவர்கள் உதாசீனம்

*ஒரு சமுதாயத்தின் நம்பிக்கை தனிமனிதனின் ஒழுக்கமே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தால் பாரிய விளைவுகளைச் சமூகம் எதிர்நோக்கவேண்டி வரும். தாமும் முன்னுதாரண மாக நடந்து காட்டவேண்டும். தவறின் பாரிய விளைவுகளைச் சந்தித்தே ஆகவேண்டும். இன்றைய சீரற்ற சமூக நிலைமைகள், ஒழுக்கநெறிப் பிறழ்வுகள், போதைப்பொருள் பாவனை, புகைத்தல் என்பன கட்டுப்படுத்தப்படாவிட்டால்; பாரிய சமூகப் பிரச்சினைகளையும் பொருளாதாரப் பிரச்சினைகளையும், பண்பாடு, கலாசாரப் பிரச்சினைகளையும் தவிர்க்க முடியாமல் உலகம் தத்தளிக்க நேரிடும். "உலகம் என்பது உயர்ந்தோர் மேற்று" பழந்தமிழர் வழங்கிய மகுட வாசகம். மீண்டும் உயிர்ப்புப்பெற, இறைவனை நாம் அனைவரும் பிரார்த்திப்போமாக.

## பவளவிழா கீதம்

**பல்லவி**

அகவையும் தகமையும் அரும்பணி எழுகையும்
அறமுயர் தானமும் அகிலமே வாழ்த்தும் வாழி
(அகவையும் தகமையும்)

**அநுபல்லவி**

சிகரம் போலான செயற்கரிய பண்பும்
சேர்பவள விழாவினில் சிந்தை மகிழுமே!
(அகவையும் தகமையும்)

**சரணங்கள்**

ஆலரசு பூவரசு ஆறுமுகன் தேரழகு
ஆடிவரும் அடியவரின் காவடிகள் பேரழகு
வேலவனை வேண்டி வணங்கி வருவோர்க்கு
வேளை தவறாது அன்னமிடும் பேறுனக்கு
(அகவையும் தகமையும்)

சீர்சைவ கலைசார் பண்பாட்டு பேரவையின்
சிந்தையிலே பதிந்த சிறப்புயர் பவளவிழா
பார்நிதம் போற்றவே புரிந்தோமே சந்நிதியில்
பேறாகும் இந்நாளே பொன்னாளாய் மகிழவே
(அகவையும் தகமையும்)

மோகன தாசவரின் மகத்தான பணிதானே
முழுநிலா ஒளிபோன்று முடிசூடிய கலாநிதியே
தேகநிலை பாராது தினமும் பசிதீர்க்கும்
திருப்திதனை காண்பவரே தேடலுள சுவாமியாரே.
(அகவையும் தகமையும்)

வறுமை மாணவர்க்கு கற்றறிய உபகரணம்
வருந்தும் முதியவர்க்கு வளமான பரிகாரம்
வெறுமை மடியிருந்தும் விரைந்து பணியாற்றும்
வைகறை கதிரவனே வாழிய நீ பல்லாண்டு.

-கே.ஆர். திருத்துவராஜா-

உண்மையான அடக்கமே எல்லா நற்குணங்களுக்கும் பிறப்பிடமாக இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத்கீதையின் தத்துவம்

## அத்தியாயம் - 13

(தொடர்ச்சி...

## பிரபஞ்சமும் மனிதர் நிலையும்

– திரு பூ. சோதிநாதன் அவர்கள் –

### 09) அதிஆத்மம்

எமது சொந்த ஆன்மாவே அதிஆத்மம். அது மிக ஆழத்திலே எம்மிடத்திலே உள்ளது. அது கடவுளிடம் இருந்து பிரிக்கமுடியாதபடி இருக்கின்றது. ஒவ்வொருவர் இடத்திலும் முக்கியமான சாராம்சமாக உள்ளதே அந்த ஆத்மா. அது உன்னிடத்திலும், என்னிடத்திலும், எல்லோரிடத்திலும், எல்லாவற்றிலும் இருக்கின்றது. அது சமுத்திரத்தின் ஒரு துளி அல்லது ஓர் அலை. எவ்வாறு சமுத்திரமோ அதேபோல் ஒவ்வொரு தனிநிகழ்ச்சியின் பின்னால் மறைந்துள்ள அந்த இரகசியம் அதிஆத்மமே. எம்மிடத்திலே உள்ள அந்த ஆத்மாவை மேலும் சுருக்கிக்கொள்ள முடியாது. அதற்கு அப்பால் எவராலும் போகமுடியாது. அதற்குக் கீழேயும் எதுவுமில்லை. எமது ஆளுமையின் மிக ஆழத்தில் உள்ள இருப்பையே ஆத்மன் என்று அழைப்பர். அலையின் சாராம்சம் எவ்வாறு சமுத்திரம் ஆகுமோ அதுபோல எமது ஆளுமையின் சாராம்சம் பூரணத்துவமே.

### 10) கர்மம்

ஆளுமையின் சாராம்சம் தொடர்பாக இங்கு உபயோகிக்கப்பெறும் ஒரு புதிரான வார்த்தையே கர்மம். அந்தச் சொல் எல்லோருக்கும் பரிச்சயமான ஒன்றே. அதனைச் செயலோடும், அதன் பயனோடும் அடையாளப்படுத்துவர். ஆனால் இவ்விடத்தில் கீதை அந்தச் சொல்லை ஒரு விசேட கருத்திலேயே உபயோகிக்கின்றது. இங்கு பேசப்பெறும் கர்மம் உயிர்களும் ஏனைய பொருள்களும் தோற்றுவதற்குக் காரணமாக உள்ள சக்தி அல்லது ஆற்றலாகும். எல்லாவற்றையும் பிரதான காரணத்தில் இருந்து உருவாக அது ஏதுவாகிறது. நாம் இவ்வுலகில் செய்கின்ற எனது செயல், உனது செயல் மற்றும் எவரொருவரது செயலும் தனித்தனிச் சிறிய கர்மங்களே. அச்சிறு கர்மங்கள் யாவும் பிரபஞ்சத்தின் பெருநோக்கத்தை நிறைவேற்றுவதற்கான ஒரு பிரபஞ்ச உந்துசக்தியே. அந்த உந்துசக்தியின் ஓர் எதிரொலி, ஓர் இணக்கமான தூண்டுதல், ஒரு தொடர்ச்சி, ஒரு பிரதிச்செயலே எமது தனித் தனிச் செயல்கள் எல்லாம் அந்தப் பிரபஞ்ச உந்துசக்தி தன்னிடத்திலேயே ஒரு பெரிய முக்கிய இரகசியத்தை வைத்திருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11) பிரபஞ்சச்செயல்

எல்லாச் செயலும் இறுதியில் பிரபஞ்சச் செயலே. அத்துடன், அப்பிரபஞ்சச் செயலில் எச்செயலும் எனது செயலோ உனது செயலோ அன்று. இறுதியில் எனது செயல், உனது செயல் என ஒரு விடயம் இருக்காது. சமுத்திரத்தில் உள்ள ஒவ்வொரு அலையினாலும் ஏற்படுத்திய இரைச்சல் அந்தச் சமுத்திரத்தினதே. அதுபோலக் கண் இமைப்பது முதலாக எமது செயல் ஒவ்வொன்றின் ஊடாகவும் இறைவனது சங்கல்பமே செயல்படுகிறது. எமது தனிமனித சுவாசத்தின் ஊடாகப் பிரபஞ்ச சுவாசமே செயல்படுகிறது. பிரபஞ்ச விவேகத்தின் ஒரு சிறு பிரதிபலிப்பே எமது தனித்தனி விவேகம். பிரபஞ்ச இருப்பின் ஒரு சிறு பகுதியே எமது இருப்பாகும். இவ்வகையில் அமைந்த கர்மயோகத்துக்கே கீதை எங்களை வழிநடத்திச் செல்கிறது. கர்மம் என்றால் என்ன என்றும், கர்மம் எப்படி யோகம் ஆகிறது என்றும், அது எப்படித் தெய்வ அபிலாஷை ஆகிறது என்றும் நாம் அறியாவிடின் அந்தக் கர்மயோகத்தை எம்மால் புரிந்துகொள்ள முடியாது. நாம் எல்லோரும் கர்மம் என்றதும் பயப்படுகின்றோம். நாம் அந்தச் சொல்லைக் கேட்டதும் பயப்படுகின்றோம். கர்மம் எங்களைத் தளைப்படுத்து வதனாலேயே நாம் அதற்குப் பயப்படுகின்றோம். இதனால் நாம் கர்மத்தை விரும்புவதில்லை. அத்துடன் அதனை முற்றாக விட்டுவிட விரும்புகிறோம். கர்மத்தின் பயத்தில் இருந்து எமக்கு விடுதலை தருவது கீதையின் போதனையிலுள்ள சிறப்பு அம்சமாகும். கர்மம் என்றால் என்ன என்று நாம் அறிவோமாயின் அது எங்களைத் தளைப்படுத்தாது என்று கீதை எமக்குக் கூறுகின்றது. கீதை தரும் கர்ம தத்துவத்தின்படி, கர்மம் என்பது கடவுளின் சங்கல்பம் செயல்படும் முறையாகும். அது கடவுளின் பூரண அம்சத்தில் உள்ள ஓர் ஆக்க சக்தியாகும். அந்த ஆக்க சக்தி எல்லாக் காரணங்களினதும் காரணத்தில் இருந்து எல்லாம் தோன்றுவதைக் குறிக்கும். ஏழாவது அத்தியாயத்தில் அர்ச்சுனனால் எழுப்பப்பெற்ற வினாக்களுக்கான விடைகள் எட்டாவது அத்தியாயத்தின் ஆரம்பப் பகுதியில் மேற்கூறிய ஒருசில வார்த்தைகளினால் தரப்பெறுகின்றன.

## 12) மரணத்தின் பின்

மேற்குறித்த தத்துவ அல்லது பிரபஞ்ச அடிப்படையோடு பூரண படைப்புத் திட்டத்தை நாம் புரிந்துகொள்ளுகின்றோம். அத்துடன் இவ்வுலகில் எமக்கு மரணத்தின் பின் என்ன நிகழும் என்பது பற்றியும் ஒரு கருத்தைக் கொள்ளமுடியும். அர்ச்சுனனால் முன்வைக்கப் பெற்ற வினாக்களுள் ஒன்று, கடவுளை அடைவதைப் பொறுத்தவரையில் இவ்வுலகை விட்டு நீங்கும் சமயத்தில் ஒருவர் மேற்கொள்ள வேண்டிய வழி எது என்பதாகும். மரணத்தின்பின் ஆன்மாவின் நிலை என்ன என்பதை ஆராய்வதற்காகக் கீதையின் எட்டாம் அத்தியாயத்தின் பெரும்பகுதி எடுத்துக்கொள்ளப்பெறுகிறது. அந்த ஆய்வுகள் படைப்புமுறையின் பிரபஞ்ச அடிப்படையைச் சுருக்கமாக விளக்கும் உட்கிடையாக இங்கே சுட்டிக்காட்டப்பெறுகிறது. எங்களுக்கிடையேயுள்ள பரஸ்பர உறவுகளும், எமக்கு வெளியேயுள்ள இயற்கை உலகத் துக்கும் இடையே உள்ள உறவுகளும் அந்தப் பிரபஞ்ச படைப்பில் அடங்குகின்றன.

*சரியாகப் புரிந்துகொள்வதற்கு இருக்கும் இரண்டு எதிரிகள் சினமும் சகிப்புத்தன்மையும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையின்போது எமது இதயங்களில் எவற்றை எல்லாம் ஆழமாகச் சிந்தித்தோமோ, அது பிரக்ஞையில் ஆழமாக உணர்ந்தோமோ அவை யாவும் இவ்வுலகைவிட்டு நீங்கியபின் தாமாகவே அனுபவ வடிவில் வருகின்றன. அதுவும் எமது இருப்பின் ஒரு பகுதிபோல அமைகிறது. அதுதான் மறுபிறப்புப் பற்றிய உளவியலின் அடிப்படை.

## 13) மறுபிறப்பு

மறுபிறப்பு என்பது கடவுளோ படைப்பவனோ ஒருவருக்கு பகிர்ந்தளிக்கும் ஒரு தண்டனை அன்று. அது அத் தனிமனிதனது எல்லைக்குட்பட்ட தன்மையினால் இயல்பாகச் செயற்படும் ஒரு தத்துவமே. மேலும் எல்லையற்றதில் இருந்து எல்லைக்குட்பட்டதின் பிரிக்கமுடியாத தன்மையினாலும் அத் தத்துவம் இயங்குகின்றது. மறுபிறப்பு என்பது இறைவனை நோக்கிய திசையில் ஒரு மனிதனின் இருளில் செல்லும் ஒரு குருட்டு நடையே. பல தடவை விழுந்தும் எழுந்தும் ஒருவர் கடவுளை அடையும் வழியை அநுபவத்தின் மூலம் அறிந்துகொள்கின்றனர். பிறப்பும் இறப்பும் எமக்குப் பயிற்சி வழங்கும் ஒருவகைத் தொடர் அநுபவங்களாகும். அதன் விளைவாக பல மில்லியன் தடவை நாம் பிறந்து இறந்தாலும்கூட வாழ்க்கையின் ஞானத்தை உடனடியாகக் கற்றுக்கொள்வதில்லை. ஏனெனில் தகுந்த அறிவுக்கான வழியைப் பல்லாயிரம் தடவை பிழைவிட்டுத் திருந்துவதால் கண்டுபிடிக்க முடியாது. நேரடியான ஞானத் தெளிவுக்கு அது வழி அன்று. பல தடவை விழுந்தபின் எவ்வாறு நாம் விழுந்தோம் என்பது பற்றிய ஒரு கருத்தைப் பெறக்கூடும். ஆனால், அது பயனற்ற ஒரு விடயம். அறிவு ஓர் அகரீதியான ஒளி. அந்த ஒளி நாம் பள்ளத்தில் விழுவதி லிருந்தும் காப்பாற்றக் கூடியது. அது நாம் விழுவதை எதிர்பார்த்துப் பின் விழாமல் இருக்கக் கற்றுத்தரும் ஒரு புதிரான விடயம் அன்று.

## 14) ஆசை

எமக்கு அதிகம் விருப்பமான பொருள்களாகப் பலவற்றை நாம் எமது இதயங்களில் அநுபவிக்கின்றோம். அப்பொருள்களாகவே நாம் ஆகின்றோம். அவற்றையே நாம் அநுபவிக்கப் போகின்றோம். கடவுளின் இராச்சியத்தில் உள்ள எல்லாம் நிறைந்த திட்டத்தில் எந்த ஓர் ஆசையும் நிறைவேறாது போவதில்லை. ஆதலால் ஒவ்வோர் ஆசையும் நிறைவேற்றும்படி இருக்கின்றது. சமுத்திரத்தில் ஒவ்வொரு துளியும், ஒவ்வொரு குமிழியும் எப்படி அதன் அடியில் ஆற்றலைக் கொண்டிருக்கிறதோ அப்படியே எவ்வளவு முக்கியமற்றதாயும், சிறியதாயும் ஓர் ஆசை இருந்தபோதும் அதற்குப் பின்னால் பிரபஞ்சத்தின் ஆதரவு உண்டு. இதனாலேதான் ஒவ்வோர் ஆசையும் நிறைவேறுகிறது. எல்லா ஆசைகளையும் நிறைவேற்றுபவரோடு இறுதி யில் ஒவ்வோர் ஆசையும் தொடுக்கப்படுகிறது. நாம் எதனைக் கேட்டாலும் கடவுளின் படைப் பிலுள்ள எல்லையற்ற களஞ்சியத்தில் இருந்து எமக்கு அது வழங்கப் பெறுகிறது. நாம் வாழ்நாள் முழுவதும் கடவுளின் சிந்தனையில் மூழ்கி இருப்போமாயின் நாம் இறக்கும்போது அவரோடு தொடர்புகொள்ளக்கூடியவராயும், அவரை அடையக்கூடியவராயும் இருப்போம்.

*எந்தக் காரியத்திலும் வெற்றியின் முதற்படி அந்தக் காரியத்தில் கொண்டிருக்கும் ஆர்வம்தான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15) இறுதி எண்ணம்

இவ்வுலக வாழ்வு என்ற மரத்தின் பழமே இறுதி எண்ணம். அதனால் இறக்கும்போது எல்லோருக்கும் கடவுளைச் சிந்திக்கும் தருணம் வழங்கப்பெறுவதில்லை என்பதை நாம் மிகக் கவனமாகக் குறித்து வைத்துக்கொள்ள வேண்டும். முட்செடியின் விதையை விதைத்துவிட்டு அதிலிருந்து அப்பிள் பழத்தை நாம் எதிர்பார்க்க முடியாது. எதனை நாம் விதைக்கிறோமோ அதையே அறுவடை செய்ய முடியும். இதுவே செயல், அதன் பிரதிச் செயல் என்பவற்றின் விதி. இன்று ஒருவர் எதனை விரும்பினாலும் அவர் அதனைச் சிந்திக் கக்கூடியவராக இருக்கின்றார். அவ்வாறு இருக்கும்போது கடவுளையும் விரும்பி வாழ்ந்தாலும் இறக்கும் தறுவாயில் அவரை நினைக்க முடியும் என்று எண்ணக்கூடாது. ஒரு மரத்தின் பழம் எவ்வாறு அம் மரம் முழுவதன் சாரமாக இருக்குமோ அவ்வாறே எமது இறுதி எண்ண மும் ஒரு திரண்ட ஆற்றலாகவே இருக்கும். அந்த ஆற்றலோடு எமது முழு ஆளுமையும் ஒரு விண்கலம் தனது இலக்கை நோக்கி விரைவதுபோலச் செல்லும். அது நாம் வாழ்நாள் முழுவதும் எண்ணிய, உணர்ந்த, செய்தனவற்றின் விளைவானதாகவே இருக்கும். நாம் எமது வாழ்வு முழுவதிலும் எண்ணியிராத எண்ணத்தை மரணத் தறுவாயில் எண்ண முடியாது. பாலில் இருந்து அதன் சாரமாக வெண்ணெய் வருவதுபோல நமது வாழ்நாள் முழுவதும் எண்ணியதன் சாரமாகவே இறுதி எண்ணமும் வரும். அதற்கு முற்றும் வித்தியாச மான வேறொரு எண்ணம் அந்த இறுதித் தருணத்தில் வரமுடியாது. உண்மையை அறியாத மூடர்களின் கருத்தே யோகம் வயதுபோனவர்களுக்கு மட்டும் தான் என்ற கூற்றாகும். அது போன்றதே மரணத் தருணத்தில் எங்களால் கடவுளை நினைக்கமுடியும் என்ற கருத்தும். ஏனெனில் இறுதித்தருணம் எப்போது வரும் என்று ஒருவருக்கும் தெரியாது. அத்தருணம் இப்போதோ அல்லது எப்போதோ வரலாம். அது ஐம்பது வயதுக்குப் பின்னரே வரும் என்று கற்பனை செய்வது ஒருவரின் மிகப்பெரிய அறியாமையாகும். அடுத்து, நாம் மரணிக்கும்போது கடவுளைச் சிந்தித்துக்கொண்டு இருப்போம் என்பதை எவ்வாறு நம்மால் உறுதி கூறமுடியும்? பெரும்பாலும் மரணிக்கும்போது ஒருவர் அதிர்ச்சி அடையலாம்; நரம்புகள் செயலிழக்கலாம்; மனம் நினைவை இழக்கலாம்; அவர் அறியாமலே அவரது உயிர் போகலாம். அவ்வாறாயின் இறக்கும் தருணத்தில் எவர்தான் கடவுளைச் சிந்திக்க முடியும்? (தொடரும்...

### கந்தா என்றாலே கண்முன்னே வருபவன் முருகன்

*மரண பயத்தில் உனையே நான் காண்பேன் முருகா*
*மயிலேறி ஓடிவந்தருள் வாய் நீயே முருகா*
*தருணமவ் வேளை நினைப்பேன் வேலே வேலே என்று*
*தக்க சமயத்தில் எமைவந்து காப்பாய் நீயே*
*அருணகிரி புகழ் உரைக்க வைத்தாய் நீயே*
*அநுபூதி ஓதி உணர்ந்தேன் நானே*
*கருணை பொழியும் உனது ஓராறு முகமும் காண*
*கந்தா என்றாலே கண்முன் தோன்றுவாய் நீயே.*

-சின்னப்பு தனபாலசிங்கம்-

*யோசனைகள் நேரத்தையும் அலையையும்போல யாருக்கும் காத்திருப்பதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதியாதார் முற்றம் மிதியாதே

*– திரு முருகுப்பிள்ளை செல்லத்தம்பி* அவர்கள் –

மதியாதார் தலைவாசல் மிதியாதே என்று
மானமுள்ள மனிதருக்கு ஔவை சொன்னது

பகுத்தறிவின் பயன்பாடு பார் முழுதும் பக்குவம் பெற்று விளங்கவே மனித குலத்தின் விருத்தியை மண் உலகிற்கு அறிமுகம் செய்துவைத்தான் இறைவன். பார்முழுதும் பக்குவம் பெற்று விளங்க பகுத்தறிவை உடமையாகக் கொண்ட மனிதனிற்கு சீர்பெறவே வாழ்வின் சிறப்புக்களில் மேல் ஓங்கி பேர் பெற்று விளங்கும் பெரும் பாக்கியம் தேவையானது. இந்தப் பகுத்தறிவானது மனித குலத்தின் முயற்சிக்கும் எழுச்சிக்கும் பாரியதொரு பொறுப்பாக இருந்து வருவது கண்கூடு. அது எப்படி எனின் உயர்வுக்கும் தாழ்வுக்கும் நன்மைக்கும் தீமைக்கும் உருவாக்கங்களையும் வேறுபாடுகளையும் கண்டறிந்து பகுப்பாய்வு செய்து வாழ்வின் உயர்வுநிலையை உருவாக்கும் உந்துசக்தியாக அமையப்பெறுகிறது.

மனித குலத்தின் தோற்றப்பாட்டில் பகுத்தறிவின் பயன்பாடு இல்லையாகில் உலகில் மனித சஞ்சாரமே இருக்கமுடியாது. மனித சஞ்சாரம் இல்லாவிடில் உலகம் என்ற ஒன்றும் இருக்கமுடியாது. அப்படியாயின் இயற்கையின் தாகம் தீராது இறைமையின் நோக்கமும் இல்லாத ஒன்றே. எனவே இப்பகுத்தறிவின் பயன்பாடு பார் முழுதும் வாழும் மக்களுக்கு மிகவும் இன்றியமையானது. இதுவே தமக்கும் நம்மைப் படைத்த இறைவனுக்கும் செலுத்தும் கைமாறும் கடமையும் ஆகும். இந்த மனித குலம் தம் வாழ்வில் அன்பையும் அறிவையும் உண்மையையும் நேர்மையையும் பண்பாட்டையும் பயனையும் வளர்த்தெடுத்து தாமே தம்மை தக்க தன்மானம் மிக்கவராக ஆற்றிக்கொள்ளவேண்டும். இப்படிப்பட்டவர்கள் தாம் வாழ்வதோடு தக்காரையும் வாழவைக்கும் தயாள சிந்தை கொண்டிருக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் மற்றவர்களால் மதிக்கப்பெற வாய்ப்பு ஏற்படும்.

இல்லறம் என்பது நல்லறம் ஆகும். இந்த இல்லறம் என்ற நல்லறத்தில் இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை என்பது முதுமொழி. இந்த முதுமொழிக்கிணங்க அவள் இல்லை என்றதொன்றும் இல்லாது இல்லறத்தில் பொலிந்து விளங்க கண்ணிறைந்த கணவன் ஒன்று வேண்டும். அவனே இல்லற இயல்பிற்கு இன்றியமையாதவன். "போற்றும் கணவன் உயர் பெறவேண்டும் பொன்மகளே நீ வாழ்க" என்பது திரைப்படப் பாடலாகும். கணவனையே அவள் கண்கண்ட தெய்வமாக போற்றி வாழவேண்டும். இதையே,

"தெய்வம் தொளாஅன் தொழுநன் றெழுதெழுவாள்
பெய்எனப் பெய்யும் மழை"

என்று பெண்ணின் பெருமையை வள்ளுவர் கூறுகின்றார். பொய்யாமொழிப் புலவர் இப்படி இல்லாமல், அவள் தன் பெருமை தன்னை தக்க வைக்காமல் தடுமாறி நடப்பாளே

*மனிதன் மிக உயர்ந்த உச்சியை அடையலாம். ஆனால் அங்கேயே தங்கிவிட முடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயின் இல்லறம் என்றதொன்று இல்லாமல் போய்விடும். கண்ணிறைவு பெற்ற கணவனும் கானகம் செல்லவே நேரிடும். இதனையே,

"பத்தாவிற்கு ஏற்ற பதிவிரதை உண்டானால் - எத்தனும்
கூடி இருக்கலாம் சற்றே ஏறுமாறாக இருப்பாளே
யாமாயில் கூறாமல் சன்னியாசம் கொள்"

என்று மாண்புமிகு ஔவை அந்த மதிக்கப்படாத கணவனுக்கு உபதேசம் செய்தார்.

நாம் றோட்டிலோ ஒழுங்கையிலோ சில காலம் காணாத ஒருவரைக் கண்டதும் மனிதநேயத்தை வெளிப்படுத்தும் வகையில் வணக்கம் என்று கூறுகின்றோம். உடனே அவர் தன் நிலையை மறந்து தன்னிலும் மேலாக எம்மை மதித்து பிரதியுபகாரமாக ஒரு முறை அல்ல இரு முறைகள் வணக்கம் வணக்கம் என்று கூறிச் செல்கிறார். இதிலிருந்து மனிதாபிமானத்தின் மகிமை இருவரிடமும் எவ்வாறு கொண்டாடப்படுகிறது என்பது புலனாகிறது அல்லவா.

ஒரு வைத்தியர் இன்னொரு வைத்தியரை தனக்கு துணையாக வைத்திருந்தார். அங்கு வைத்தியத்திற்கு வருபவர்களில் சிலர் முந்தியவர்தான் தம்மைப் பார்க்க வேண்டும் என்று கூறுகிறார்கள். அவர் அங்கு இல்லாதபோது அவர் வரும்வரை அந்த நோயாளிகளை வரவேற்று சிறிது நேரம் காத்திருக்குமாறு மிகவும் அன்புடன் ஆதரித்து அமர வைத்தார். இதேநேரம் அந்த நோயாளிகள் அந்த வைத்தியரின் அன்பையும் ஆதரவையும் நினைந்து மனதாரப் போற்றி மகிழ்கிறார்கள். பின்பு அவர் வந்ததும் இரு பக்கத்தினரின் வேண்டுகோளை ஏற்று மனமகிழ்ந்து தனது சேவையை ஆரம்பிக்கிறார் அவரது வைத்திய சேவை சிறப்புடன் எந்நாளும் இவ்வாறு நடைபெறுகிறது.

சாதாரணமான ஒரு மனிதன் கூட இன்னொருவருடன் மனம்கொள்ளத் தகாதவகையில் பழகி வந்தார். ஆயின் அவர் மனித இயல்பிற்கு அப்பாற்பட்டவர். அவரினால் ஊருக்கோ உலகத்திற்கோ சமூகத்திற்கோ எந்தவிதமான அருகதையும் அற்றவர் ஆவார். இன்னும் "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" என்ற பாணியில் கற்றவர் ஒருவர் கற்றவர் ஒருவரிடம் உதவிகோரும் வண்ணம் அவர் வீட்டுக்குச் சென்றிருந்தார். அந்த வீட்டுக்காரர் கற்றவராக இருந்தபோதிலும் வந்தவரை வரவேற்காமல் தன்மானம் இல்லாத மிலேச்சத்தனம் கொண்டவராக உபத்திரவத்திற்கு உள்ளாக்கி வெறுக்கத்தக்க வகையில் அனுப்பி வைத்தார்.

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலா கருணைமா கடலை
மற்றவர் அறியாத மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புறங்கள் செற்ற சிவனை
திருவிழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னை கண்டுகண்டுள்ளம்
குளிர்க என்கண்கள் குளிர்ந்தனவே

*தைரியப்படுத்துவது என்பது ஒருவனுக்குச் செய்யும் உதவியில் மூன்றில் ஒரு பங்கு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற திருவிசைப்பாவிலுள்ள திருமாளிகைத் தேவரின் இப்பாடலுக்கு இணங்க அவர் வந்தவரை வரவேற்று மதிப்பளித்து உதவிசெய்ய முடியாவிட்டாலும் உபத்திரவம் செய்யாமல் அனுப்பியிருந்தால் இவர் மட்டுமல்லாது இவரைச் சார்ந்தவர்களும் எழுச்சி கொள்வார்கள். ஆனால் இவரோ தான்தோன்றித்தனமான வழிமுறைகளைக் கையாண்டு தானே தனக்கு விரோதியாகி தானும் கெட்டு தன்மான உணர்ச்சியும் கெட்டு தரணிக்கு மிகவும் பின்னடைவுடையவராகவே காணப்பட்டார்.

ஆனால் திருப்பி அனுப்பப்பட்டவரோ மனித விழுமியங்களை மாட்சிமைப்படுத்தும் மனப்பொலிவோடு மண்ணகத்தில் சிறப்புற வாழ்ந்து வரலானார். எனவே மானம் மரியாதை மதிப்பு என்பனவற்றின் மகத்துவம் எத்தகையது அதன் பெறுமானம்தான் என்ன அதைப் போற்றி வாழ்வாங்கு வாழ்ந்து மனித சமூகம் உயர்வு அடையவே மாபெரும் பழந்தமிழ்ப் புலவராகிய ஔவையார் தனது பாடலில்,

"மதியாதார் தலை வாசல் மிதித் தொருகால் சென்று மிதியாமை
கோடி பெறும்"

என்று மனித மதிப்பீட்டில் வரிபாகத்தை பாடி வைத்தார். எனவே மனிதன் மனிதனாக வாழ மாண்புமிகு எண்ணங்கள் அவன் மனதில் குடியேற வேண்டும். அப்போதுதான் மாநிலம் சிறந்து விளங்கும்.

---

## உன்னை நீயே கவனி

ஒரு மன்னரின் ரதம் இமயமலை நோக்கி சென்று கொண்டிருந்தது. வாழ்வை வெறுத்த அவருக்கு தற்கொலை எண்ணம் அதிகரித்தது. வழியில் ஒரு மனிதர் மரத்தடியில் தியானத்தில் இருந்தார். எளிமையான அவரது முகம் தாமரைபோல மலர்ந்திருந்தது கண்டதும் அவர் ரதத்தை நிறுத்தினார். கண்களைத் திறந்த அந்த மனிதர், "என்ன வேண்டும்?" எனக் கேட்டார். "காசியின் மன்னன் நான்! செல்வம் எல்லாம் இருந்தும், ஏதுமில்லாததுபோல மனம் வாடுகிறேன். எளிமையாக இருந்தாலும் உங்களின் பிரகாசமான முகம் என்னை ஈர்க்கிறது. சாக முடிவெடுத்த நிலையிலும், உங்களிடம் சற்று நேரம் பேசத் தோன்றுகிறது. அதனால் நின்றுவிட்டேன்" என்றான் மன்னன.


மன்னனின் பேச்சைக் கேட்டாலும், அந்த மனிதரின் பார்வை முழுவதும் மன்னனின் கால்களை நோக்கியிருந்தது. மன்னருக்கு சிறுவயது முதல் கால்களை ஆட்டும் பழக்கம் உண்டு. அந்த மனிதர் தன் கால்களையே பார்க்கிறார் என்பதை அறிந்ததும் சட்டென அசைப்பதை நிறுத்தினான் மன்னன். "மன்னா! எவ்வளவு காலமாக இந்தப் பழக்கம் உள்ளது?" எனக் கேட்டார் அவர். "நினைவு தெரிந்த நாள் முதல்..." என்றான். "இப்போது ஏன் நிறுத்தி விட்டாய்?" என்று கேட்டார் அவர். "நீங்கள் என் கால்களையே உற்றுக் கவனித்தீர்கள்" என்றான். "பார்த்தாயா! மற்றவர் உன்னைக் கவனிக்க வேண்டுமெனக் கருதுகிறாய். பிறரைச் சார்ந்தே வாழ ஆசைப்படுகிறாய். உலகத்தைப் பற்றிக் கவலைப்படாதே. உன் கால்களை நான் கவனித்ததால், நீண்டநாள் பழக்கத்தைக்கூட நிறுத்திவிட்டேன் என்கிறாய். இனி உன்னை நீயே கவனிக்கத் தொடங்கு. எதையெல்லாம் நிறுத்தவேண்டும் என்பது தெரியவரும்" என்றார். மன்னனின் மனதில் ஒளிக்கீற்று படர்ந்தது. பணிவோடு, "தாங்கள் யார்?" என்று கேட்டான். "புத்தர்" என்றார். அந்த மனிதர் காலில் விழுந்து வணங்கினார். தன்னைத் தானே கவனிப்பதே வாழும் கலை என்பதை அறிந்ததும், மன்னனின் ரதம் அரண்மனை நோக்கித் திரும்பியது.

*நற்காரியங்கள் செய்வதில் அஞ்சவேண்டாம். அது ஆனந்தத்திற்கு மறுபெயர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



ஆடி மாத ஞானச்சுடர் மலர் வெளியீட்டில் சிறப்புப்பிரதி வழங்கப்படும்போது...



உனது குணம் சரியாக இருந்தால் உனது புகழும் சரியாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






(மேலே) ஆடி மாத ஞானச்சுடர் மலர் வெளியீட்டின்போது சிறப்புப்பிரதி பெற்ற அன்பர்கள்

சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமுதாயப் பணிகளின் வரிசையில் உடுப்பிட்டி அ.மி. பாடசாலையின் உதைபந்தாட்டம் மற்றும் கரப்பந்தாட்டம் அணியினருக்கான சீருடைகள், கரப்பந்தாட்டப் பந்துகள் கொள்வனவுக்காக 150,000. 00 ரூபா நிதி பாடசாலை சமூகத்தினரிடம் ஆடி மாத ஞானச்சுடர் வெளியீட்டின்போது கையளிக்கப்பட்டது.

*உன்னதமான ஒவ்வொரு வேலையும் முதலில் முடிந்ததாகவே தோன்றும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமுதாயப் பணிகளின் வரிசையில் சிறுப்பிட்டி மேற்கு நாகதம்பிரான் ஆலய திருவிழாவினை முன்னிட்டு 500கிலோ அரிசி, 25கிலோ பருப்பு, மரக்கறி வகைகளுடன் 50,000. 00 ரூபா நிதியும், நவிண்டில் ஞான வைரவர் அறநெறிப் பாடசாலைக்கு 05செற் வாங்கு, மேசையுடன் 50,000. 00 ரூபா நிதியும் வழங்கப்பட்டது.



நம்முடைய உறுதியான அபிப்பிராயத்தை பிறர் வாயால் கேட்பது பேரானந்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமுதாயப் பணிகளின் வரிசையில் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்துக்கு 230,000. 00 பெறுமதியான நிழற்பிரதி இயந்திரமும், வட்டுக்கோட்டை யா/ துணைவி அமெரிக்கன் மிசன் பாடசாலை மாணவர்களுக்கான பரீட்சை வினாத்தாள் தேவைக்காக 50,000. 00 ரூபா பெறுமதியான எழுதுபொருள் வகைகளும் வழங்கப்பட்டன.



வீட்டையும் நாட்டையும் காக்க நினைக்கும் ஒருவனே உண்மையான நண்பன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 86

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 மாங்கிளை தன்னில் தோன்றி மாவெல்லாம் தானாய் மாறும்
குருவிச்சை மாவினோடு தன்னையும்பின் அழித்திடல்போல்
மனதுக்குள் சிறிதாய்த் தோன்றி மனமெல்லாம் தானாய் மாறும்
தீயவை மனத்தினோடு மனிதத்தை அழிக்கும் காண்பீர்.

02 நெல்லினுள் சிறிதாய்த்தோன்றி நெல்முற்றும் தானாய் மாறும்
புல்லது நெல்லினோடு தன்னையும் பின்அழிந்திடல் போல்
சிந்தையுள் சிறிதாய்த் தோன்றிப்பின் சிந்தனை முழுவதுமாகும்
சந்தேகம் சிந்தையோடு சந்ததி அழிக்கும் காண்பீர்.

03 வீட்டின்மேல் சிறிதாய் வீழ்ந்து வீடெலாம் தானாய் மாறும்
நெருப்பது வீட்டினோடு தன்னையும்பின் அழித்திடல்போல்
நட்பின்மேல் சிறிதாய் வீழ்ந்து நட்பெல்லாம் தானாய் மாறும்
பகையது நட்பினோடு நாட்டையே அழிக்கும் காண்பீர்.

04 பாற்குடம் தன்னுள் வீழ்ந்து பால்முற்றும் தானாய் மாறும்
மோர்த்துளி பாலினோடு தன்னையும் பின்அழித்திடல்போல்
உள்ளத்துள் சிறிதாய் வீழ்ந்து உள்ளமே தானாய் மாறும்
கள்ளன்பின் உள்ளத்தோடு உள்ளதும் அழிக்கும் காண்பீர்.

05 நீரினுள் வீழ்ந்து பின்னர் நீர் முற்றும் தானாய் மாறும்
உப்பது நீரினோடு தன்னையும் பின் அழித்திடல் போல்
நெஞ்சினுள் சிறிதாய்த் தோன்றி நெஞ்சமே தானாய் மாறும்
வெஞ்சினம் வாழ்வினோடு வளத்தையும் அழிக்கும் காண்பீர்.

06 அலைச்சல் அதிகமென்று கருமமொன்றைத் தவறவிட்டு
விளைச்சலைப் பெற்றிடாமல் வீண்காலம் கழிப்பதிலும்
விளைச்சலை மனத்திருத்தி அலைச்சலினை எதிர்கொண்டால்
அலைச்சலே பின் விளைச்சலாகி பெரும்லாபம் தந்திடுமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 பிரச்சினை அதிகமென்று பொறுப்பொன்றைத் தவறவிட்டு
நிம்மதியைப் பெற்றிடாமல் நீண்டதுயர் கொள்வதிலும்
நிம்மதியை மனத்திருத்தி பிரச்சினையை எதிர்கொண்டால்
பிரச்சினைகள் தீர்ந்திடலேபின் பெருஞ் சுகத்தைத் தந்துவிடும்.

08 முடியாத கருமமென்றோர் முடிவதனை எடுத்துவிட்டு
விடிவுதனை எட்டிடாமல் வீண்காலம் கழிப்பதிலும்
விடிவுதனை மனத்திருத்தி முடியுமென்று முயற்சித்தால்
முடியுமென்ற முடிவேபின் விடிவுதனைத் தந்துவிடும்.

09 கொடுமைகள் அதிகமென்று கூடிவாழ்தல் தனைவிடுத்து
இனிமையான இல்லறத்தை இழந்து நாம் வாழ்வதிலும்
இனிய வாழ்வை மனத்திருத்தி கொடுமைகட்கு முகம் கொடுத்தால்
கொடுமையேபின் இரக்கமாகி இனிய வாழ்வைத் தந்துவிடும்.

10 கடினமான காரியம் என்று ஒன்றை எண்ணிவிட்டு
சுலபத்தை அடைந்திடாமல் சோகத்தில் வாழ்வதிலும்
சுலபத்தை மனத்திருத்தி கடினமதைக் கையாண்டால்
கடினமே பின் சுலபமாகி சுகவாழ்வைத் தந்துவிடும்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னபணிக்கும்**

**மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செந்திவேல் மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல — 0213219599, 0212263406

**காசோலை**
செந்திவேல் மோகனதாஸ்
க.இல — 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com

*சுதந்திரத்திற்குக் கட்டுப்பாடுகள் உண்டு. ஆனால் எல்லைக்கோடுகள் இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதிகளும் சமயங்களும்

– திரு இராம ஜெயபாலன் அவர்கள் –

மனிதர்களிடையே காணப்படுகின்ற ஏற்றத்தாழ்வுகளுக்கு சாதிகளே காரணம் என்றும் சாதிகளுக்கு சமயங்களே காரணம் என்றும், சமயங்களை ஒழித்தால் சாதிகள் ஒழியும் என்றும் சாதிகள் ஒழிந்தால் ஏற்றத்தாழ்வுகள் ஒழியும் என்றும் தம்மை முற்போக்கு வாதிகள் என்று கூறிக்கொள்வோரின் சித்தாந்தக் கருத்துக்கள் காணப்படுகின்றது. தவிர இக் கருத்துக் களுக்குப் பக்கபலம் சேர்ப்பதுபோல் திராவிடவாதக் கருத்துக்களும் கூட காணப்படுகின்றது. அதாவது சாதிகளும் சமயங்களும் ஆரியர்களால் உருவாக்கப்பட்டது என்றும் தமிழர்களுக்கு சாதி சமயங்கள் இருக்கவில்லை என்பது இக்கருத்துக்களின் சாராம்சமாகவும் இருக்கின்றது. மேலும் மறு சமயங்கள்கூட சாதியங்களுக்கெதிரான நிலைப்பாடுகளை கொண்டு இருக்கின்றன. எனவே வரலாற்று ரீதியாக சாதி சமயங்களின் தோற்றங்களையும் பரிணாமங்களையும் ஆய்வுசெய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

இறைவன் படைப்புக்களைப் பரிணாமத்தால் படைத்து, படைப்புக்கள் இயங்கும் வண்ணமும் படைத்து உயிர்களையும் பரிணாமத்தால் படைத்து, உயிர்களும் இயங்கி வாழும் வண்ணமே படைத்தும் இருக்கின்றார். இவ்வாறு இயற்கை இயங்கும் வண்ணம் படைத்தமையால், படைப்புக்களில் முரண்பாடுகள் இயக்கங்கள் கருதி இறைவனால் திட்ட மிடப்பட்டு இருக்கின்றன. மேலும் இயற்கையில் இயக்கம் கருதி இறைவனால் முரண்பாடுகள் உருவாகச் செய்யப்பட்டாலும், இயற்கையை பாதுகாப்பதில் பல்வேறு அரண்களும் கூட காணப்படுகின்றது.

இந்தவகையில் இயற்கை வளங்கள் பல்வகையில் காணப்படுவதால், அந்த இயற்கை வளங்களை நுகர்வதற்காக மனிதர்கள் நிலம் சார்ந்து வாழத் தலைப்பட்டார்கள். இவ்வாறு நிலம் சார்ந்து மனித இனம் தனது வாழ்வை தொடங்கியதால் அந்தந்த நிலக் குழுக்களின் தலைமைத்துவங்களும் நிலம் சார்ந்தே உருவானது. மேலும் மனிதர்கள் தமது முன்னோர்களின் ஆன்மாக்களை தெய்வங்களாக வழிபடத் தொடங்கியபோது நிலம் சார்ந்தே சமயங்களும் தோற்றம் பெற்றன. எனவே சமய குருமாரும் நிலம் சார்ந்தே உருவானார்கள். இவ்வாறு முதலாளிகளும் தொழிலாளர்களும்கூட, நிலம் சார்ந்தே உருவானார்கள். மேலும் ஒரு நிலத்தவருக்கு வேறொரு நிலத்தவர் தலைவராகவோ சமயப் பெரியாராகவோ முதலாளி யாகவோ தொழிலாளியாகவோ இருக்க முடியாத நிலைகளும் காணப்பட்டன. எல்லாமே அந்தந்த நிலத்தவராகவே ஆரம்ப காலத்தில் இருந்தார்கள். இவ்வாறு நிலம் சார்ந்து சாதியாகவும், சமயமாகவும் வாழ்ந்த காலத்தில் ஒரு சாதி இன்னொரு சாதிக்கோ சமயத்திற்கோ அடிமையாக இருக்கவில்லை. ஆனால் வளப் பற்றாக்குறைகள் ஏற்பட முரண்பாடுகள் தோற்றம் பெற்றன. இவ்வாறான காலத்தில் மனிதர்களை இணைக்க மதங்கள் தோன்றின.

*நட்பு ஆண்டவன் அளித்த பரிசு. மனிதன் பெற்றுள்ள வரங்களில் தலைசிறந்தது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் மதங்களின் முதல்நோக்கு ஒரு இறைவன், ஒரு மொழி, ஒரு இனம், ஒரு சாதி என்பதேயாகும். ஆக சாதிகள் சமயங்கள் அற்ற மனித இனத்தை உருவாக்குவதே மதங்களின் நோக்காகவும் இருந்தது.

**வம்சங்கள்**

ஒரு இறைவன் கோட்பாடு வீழ்ச்சியடைந்து சூரிய வம்சமாகவும் ஒரு இறைவன் கோட்பாட்டை ஏற்கமறுத்தவர்கள் சாதிகளாயும் சமயங்களாயும் சந்திர வம்சமாகவும் உலகம் முழுவதுமே பிளவுபட்டு வாழ்ந்து வந்தார்கள். அதாவது உயர்ந்தவர்களுக்கு சாதி சமயங்கள் இருக்கவில்லை. ஆனாலும் ஆளுமை ஆற்றல்களால் ஏற்றத்தாழ்வுகள் இருந்தன. இவையே வர்ணங்களாக வகைப்படுத்தப்பட்டன. பிராமணர்கள் சூரியவம்சத்தில் இருந்தும் சந்திர வம்சத்தில் இருந்தும் வந்தார்கள். ஆனால் இவர்கள் நிலம் சார்ந்த சாதிய முறைகளில் இருந்து விடுபட்டு, சாதி சாராது தனித்துவமாகவே வாழ்ந்தார்கள். இவ்வாறே சத்திரீகர்களும், நிலம் சார்ந்த சாதிகளைச் சாராது தனித்துவமாகவே வாழ்ந்தார்கள். அதுபோல் வைசிகர்களும் நிலம் சார்ந்த தனித்துவமாகவே வாழ்ந்தார்கள். அதுபோல் அடிமட்ட தொழிலாளர்களும் நிலம் சார்ந்த சாதிகளைச் சாராது வர்ணத்தவராகவே வாழ்ந்தார்கள். ஆனாலும் வர்ணங்களும் பிறப்பினால் வரும் நிலைகள் அடக்குமுறைகளுக்கு வித்திட்டது.

சந்திர வம்சங்கள் புரட்சிகள் செய்து, சூரிய வம்ச ஆட்சிகளை அழிவடையச் செய்தது. ஆனாலும் புதிய வடிவில் வர்ணங்கள் தொடர்ந்தது. உயர்ந்தவர்களுக்கு சாதிகள் இருக்கவில்லை. மீண்டும் சந்திர வம்சங்களில் இருந்தே சூரிய வம்சங்கள் தோற்றம் பெற்றது. முருகப்பெருமான் இறைவனின் நெற்றிக்கண்ணில் இருந்து தோன்றினார் என்ற புராணக்கதை ஒரே கருத்தில் பல நோக்கங்களை மறைத்துச் சொன்னாலும், பிரதான நோக்கு முருகன் பூமியில் பிறந்த தாய் தந்தைக்கு பிள்ளையாக பிறக்காமையால் முருகப் பெருமானுக்கு சாதியில்லை என்ற கோட்பாடு முன்வைக்கப்படுகின்றது. ஆனாலும் வள்ளியைத் திருமணம் முடித்தமையை குறியீடாகக் காட்டி மறைமுகமாக முருகனின் சாதியும் சொல்லப்பட்டாலும், உயர்ந்தவர்களுக்கு மட்டுமல்ல பெண்களுக்கும் வீரர்களுக்கும் கற்றோருக் கும் சாதியில்லை என்ற கோட்பாடும் கூடவே இருப்பதால் முருகனுக்கு சாதி கற்பிக்க முடியாது.

எவ்வாறாயினும் மீண்டும் மீண்டும் சூரிய வம்ச ஆட்சிகள் அழிக்கப்பட்டமையால் தனித்துவமான சூரிய வம்சமான இரகுவம்சம் அடியொடு அழிந்துபோனது. ஆனாலும் பிராமணர்களால் இரகு வம்சம் பாதுகாக்கப்பட்டமையால் பிராமணர்கள் மூலமே யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரியச்சக்கரவர்த்திகள் பரம்பரை மீண்டும் உருவானது. அதாவது விஸ்வாமித்திர முனிவருக்கும் தேவதாசிக்கும் பிறந்த பிள்ளையின் வரலாறும் இரகுவம்ச வரலாறு என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு இருந்தபோதும் ஆரியச்சக்கரவர்த்திகள் பரம்பரைக்கு பிராமணர்கள் மட்டுமல்ல, வேளாளர்களும் உரிமை கொண்டாடும் பாரம்பரியங்களும் தவிர சொந்தம் கொண்டாடாத சொந்தங்களாக வேளாளர்கள் இடையே ஒரு காலத்தில் பல பிரிவினர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தார்கள். மேலும் யாழ்ப்பாணத்தை கடைசியாக ஆண்ட சங்கிலிய மன்னனும் ஆரியச்சக்கரவர்த்திகள் பரம்பரைக்கு முறையான வாரிசாக இருக்கவில்லை என்றும் இவனை எதிர்த்த ஆரியச் சக்கரவர்த்திகள் பரம்பரையினர் பலர் கொல்லப்பட்டும் தலைமறைவாகவும் வாழும் நிலைகளும் ஏற்பட்டும் இருக்கின்றது. எவ்வாறாயினும் சங்கிலிய மன்னன் பரம்பரையினரும், ஆரியச்சக்கரவர்த்திகள் பரம்பரைக்கு உரிமை கொண்டாடுபவர்களாகவும் இருக்கின்றார்கள்.

## கல்வி செல்வம் வீரம் (அரசியல்)

ஏற்றத்தாழ்வுக்கு அடிப்படைகளாக இருந்தவை கல்வி செல்வம் மற்றும் ஆளுமைகள் (வீரம்) ஆகும். வர்ணங்கள் உருவாவதற்கும், கல்வி செல்வம் வீரமே காரணங்களாகும். முக்கியமாக கல்விக்கு குறியீடாக பிராமணர்களும் வீரத்துக்குக் குறியீடாக சத்திரீகர்களும் செல்வத்துக்குக் குறியீடாக வைசீகர்களையும் குறிப்பிடலாம். இவை சாதிகளற்ற அமைப்பாகும். இவ்வாறு சாதிகளற்ற அமைப்பாக வர்ணங்கள் கல்வி செல்வம் வீரத்தைக் கொண்டு வகைப்படுத்தப்பட்டாலும் நிலம் சார்ந்த சாதிகளிடத்திலும் கல்வி செல்வம் வீரம் இருந்தன. புராண காலம் தொடக்கம், சங்ககாலம் வரை எல்லாச் சாதியிலுமே கற்றவர்களும் புலவர்களும் இருந்தும் இருக்கின்றார்கள். அரசர்களும் தவிர செல்வந்தர்களும் இருந்தும் இருக்கின்றார்கள். உதாரணமாக ஸ்ரீ கிருஸ்ணரைக் குறிப்பிடலாம். மேலும் பிராமணரான குசேலர் ஒரே குருகுலத்தில் ஸ்ரீ கிருஸ்ணருடன் கல்வி கற்றும் இருக்கின்றார்கள். எவ்வாறாயினும் கல்வி செல்வம் வீரம் தனி மனிதர்களை மட்டுமல்ல குடும்பங்களையும் இனங்களையும் நாடுகளையும் கூட ஏற்றத்தாழ்வுக்கு உட்படுத்தியது. உதாரணம் அமெரிக்கா உலக வல்லரசாகத் திகழ்வதற்கு அவர்களின் ஆற்றல் அறிவே காரணமாகும். இவ்வாறு சாதிகளும் ஏற்றத்தாழ்வு அடைய கல்வி செல்வம் வீரமே காரணங்களாகும். அதாவது ஒரு காலத்தில் ஒரு நிலத்தவர் இன்னுமொரு நிலத்தவருக்கு முதலாளியாகவோ தொழிலாளியாகவோ முடியாத நிலையிருந்தது. ஆனால் பஞ்சம் பட்டினி நோய் நொடிகள் ஏற்பட்டு ஒரு நிலத்தவர் இன்னுமொரு நிலத்தவருக்கு அடிமைப்பட்டு தொழில் செய்யும் நிலைகள் ஏற்பட்டது. இதனால் சாதிகளிடையே ஏற்றத்தாழ்வுகள் மற்றும் தீண்டாமைகள் ஏற்பட்டது.

## போர்த்துக்கேயர்கள்

முகலாயர்களுக்குப் பின் முதலில் இலங்கை இந்திய நாடுகளின் கரையோரங்களைக் கைப்பற்றியாண்டவர்கள் போர்த்துக்கேயர்கள். இவர்களின் மதம் கிறிஸ்தவமாக இருந்தபோதும் இவர்கள் கத்தோலிக்க சமய பிரிவைச் சேர்ந்தவர்கள். இவர்கள் வறுமைக்கு உட்பட்டிருந்த மக்களை மதம் மாற்றி, கல்வி கற்பித்து வேலை வாய்ப்புக்களை கொடுத்து தமக்கு விஸ்வாசமாக இங்கிருந்தவர்களை மாற்றினார்கள். தவிர இந்தியாவில் ஏழைகளாக இருந்த பிராமணர்களையும் இலங்கையில் ஆட்சிப் பாரம்பரியங்களை இழந்து இருந்தவர்களையும் அவர்களுக்கு இருந்த பன்மொழிப்புலமை காரணமாக அவர்களுக்கு மொழி பெயர்ப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாகிய முதலியார் தொழில்களைக் கொடுத்தார்கள். அவர்கள் மொழியில் முதலியார் என்றால் அடிமைகள் என்றே பொருளாகும். ஆனாலும் நிர்வாகப் பதவிகளுக்கு மதம் மாறி கல்வி கற்றவர்களுக்கே வழங்கினார்கள். இதனால் முதலிமார்களின் பிள்ளைகள் மதம் மாறிக் கல்வி கற்றே நிர்வாகப் பதவிகளைப் பெற்றார்கள். இருந்தபோதும் இவர்களுக்கு அதி உயர் பதவிகளான அரச அதிபர் பதவிகளோ, நீதிபதி பதவிகளோ வழங்கவில்லை. இரண்டாம் நிலைப் பதவியான பதிவாளர் பதவிகளே இவர்களுக்கு வழங்கப்பட்டன. மேலும் உயர் வம்சத்தினர் மதம் மாறிக் கல்வி கற்றபோதும் பேரளவில்தான் கிறீஸ்தவராக இருந் தாரகளே தவிர இந்துக்களாகவே வாழ்ந்தார்கள்.

**ஒல்லாந்தர்கள்**

இவர்களும் கிறீஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தபோதும், புறொட்டஸ்தாந் சமயப் பிரிவைச் சேர்ந்தவர்கள். போர்த்துக்கேயரை வெற்றிகொண்டு இலங்கை இந்திய நாடுகளை ஆட்சிசெய்தபோதும், தமது சமயப்பிரிவுக்கு கட்டாய மதமாற்றம் செய்யவில்லை. தவிர தேச வளமைச்சட்டங்களை ஏற்று கத்தோலிக்க சமயத்திற்கு மதம் மாறுவதைத் தடுக்க, மத சுதந்திரங்களை வழங்கினார்கள். ஆனாலும் இவர்கள் கத்தோலிக்க சமயத்திற்கே அடக்குமுறைகள் செய்தார்கள். காரணம் கத்தோலிக்கர் போர்த்துக்கேயர்களின் ஆட்சிக்கு மீண்டும் வழிகோலிவிடுவார்கள் என்ற அச்சம்தான் காரணமாகும். இவர்களது காலத்திலே கத்தோலிக்க மதத்திற்கு மதம் மாறிய உயர் வம்சத்தினர்கள் தமது தாய் மதம் திரும்பி வெளிப்படையாக மத அனுஷ்டானங்களில் ஈடுபட்டார்கள்.

ஒல்லாந்தர் காலத்திலேயே செல்வச்சந்நிதி ஆலயம் வழக்கொன்றில் வெற்றி பெற்று பதிவு செய்யப்பட்டதாக சில தகவல்கள் தெரிவிக்கின்றது. மேலும் இவர்களது காலத்திலேயே இந்தியாவில் பெருமளவான பிராமணர்கள் கல்வி கற்று பல துறைகளில் முன்னணியிலே இருந்தார்கள். இவ்வாறு நல்லூர் கந்தசுவாமி ஆலயமும் ஒல்லாந்தர் காலத்தில் பதிவு செய்யப்பட்டாலும் ஆரம்ப காலத்தில் மடாலயமாகவே வழிபாடுகள் இடம்பெற்றன. எனவே ஒல்லாந்தர்கள் காலத்தில் அரசில் செல்வாக்குப் பெற்றவர்கள் பதிவாளர்களாக இருந்தமையால் தேசவளமை சட்டங்களைக் காட்டி பல நில புலங்கள் கோவில் உரித்தாக காணிகளும் பதிவு செய்யப்பட்டன. இவ்வாறு பல சமய சார்பான எழுச்சிகள் ஏற்பட்டது.

**ஆங்கிலேயர்கள்**

இவர்களும் கிறீஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தபோதும் அங்கிலிக்கன் சமயப் பிரிவை சேர்ந்தவர்கள் எல்லா ஆட்சியாளர்களுமே படைபலத்தைக் கொண்டு ஆட்சி அமைத்தாலும் தமக்கு ஆதரவான மக்கள் கூட்டத்தை உருவாக்கியும், முன்னைய ஆட்சியில் செல்வாக்குப் பெற்றவர்களை செல்வாக்கு இழக்கச் செய்வதும் ஒரு பொதுவான நடைமுறையாக இருந்துகொண்டு வருகின்றது. இந்த வகையில் ஆங்கிலேயர்கள் நேரடியாக முன்னைய ஆட்சியில் செல்வாக்குப் பெற்றவர்களுடன் முரண்படாது இலங்கை இந்தியாவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த சுதேசிகளைக் கொண்டே மறைமுகமாக ஆதரவு வழங்கியும் பிரித்தாளும் தந்திரங்கள் மூலம் சாதித்துக் கொண்டார்கள். இலங்கையில் பெருமளவு கத்தோலிக்கரே முன்னைய ஆட்சியில் செல்வாக்குப் பெற்றவர்களாகவும், இந்தியாவில் பிராமணர்களே அதிகம் செல்வாக்குப் பெற்றவர்களாக இருந்தமையால், இந்தியாவில் ஆரிய திராவிட வாதத்தைக் கிளப்பிவிட்டு இந்தியர்களை வட இந்தியர்கள் ஆகவும் தென் இந்தியர்கள் ஆகவும் வைஸ்ணவர்கள் சைவர்களாகவும், மற்றும் பிராமண எதிர்ப்பு வாதங்களையும் ஒரு கல்லில் பல மாங்காய்கள் விழுவதுபோல் உருவாக்கிவிட்டார்கள். இலங்கையில் பெருமளவு பிற்படுத் தப்பட்ட சாதிகளைச் சேர்ந்தவர்களே கத்தோலிக்கர்களாக இருந்தமையால் தமது சமயப் பிரிவான அங்கிலிக்கன் பாடசாலைகளில் கல்வி கற்றவர்களை, சாதி ரீதியாகவும், சமய ரீதியாகவும் எழுச்சியடைய வைத்து சைவ கத்தோலிக்க முரண்பாடுகளையும் கூடவே சாதிப்பிரிவினர்களை பிளவுபடுத்தி மோத விட்டார்கள். தவிர இலங்கை முழுவதுமே சாதி ரீதியாக ஒருமைப்பட வைத்து முழு இலங்கையர்களுமே சாதிரீதியாக பிளவுபட வைத்தார்கள். மேலும் இலங்கை சுதந்திரமடைந்த பிற்பாடு தமிழர்களின் செல்வாக்கை இல்லாமல் செய்யவே மொழியின வாதங்கள் உருவாக்கப்பட்டன. எனவே மக்களைக் காலத்துக்குக் காலம் பிரித்தாள்வதற்கே அரசியல் சக்திகளால் உருவாக்கப்பட்டவைதான் மொழியின சமய சாதிய முரன்பாடுகளாகும்.

**தெளிவுரை**

ஆன்மீகம் என்பது எமது வாழ்வியல்களின் பிரதிபலிப்புக்களும் கூடவே பரிணாமங் களும் மரபுகளும் ஆகும். மனிதர்கள் எழுத்தறிவை கண்டுபிடிக்க முன்னர் ஆன்மீக சக்திகளைக் கொண்டே வேதங்களையும் அறங்களையும் காத்தார்கள். பிராமணர்கள் கடவுளுக்கும் மக்களுக்கும் இடைத் தரகர்களாக இருந்தார்கள். இதனால் வர்ணசாஸ்திர மரபில் பிராமணர்களே தலையில் இருந்தார்கள். ஆனால் அறிவியல் பரிணாமங்கள் ஏற்பட்டமையாலும் இந்துமத ஆட்சிகள் உலகில் அழிந்து போனமையாலும் அதாவது உலகில் அரசியல் அமைப்புச் சட்டங்கள் எழுத்தில் உருவானமையால், நேரடியாக சட்டத்தைப் பாதுகாக்கும் நீதித்துறையினரே முதன்மையானவர்களாக திகழ்கின்றார்கள். மற்றும் மக்கள் ஆதரவு பெற்றவர்களே, அடுத்த நிலையிலும் செல்வந்தர்களாக பல்தரப்பினரும் விளங்கு கின்றார்கள். மதங்கள் வெறும் சம்பிரதாய அறங்களாக சுதந்திரமாக செயற்படுகின்றன. ஆனால் மதங்கள் அரசியலில் செல்வாக்கு செலுத்தும்போது முரண்பாடுகள் தலைதூக்கு கின்றது. ஆனால் அரசியல் ரீதியாக சாதி சமயங்களிடையே ஒடுக்குமுறைகள் சில பக்க சார்பாக இருப்பதே கவலையளிக்கிறது.

---

*தெய்வீகத்தை அடைய நீங்கள் எவ்வித கடினமான ஆன்மீக சாதனைகளைச் செய்யத் தேவையில்லை. நீங்கள் உண்ணாமல் விரதம் இருப்பதோ, எதுவும் தேவை இல்லை. அவர்மீது உங்கள் இதயத்தின் அடிப்பகுதியிலிருந்து அன்பு செலுத்துங்கள். பாவம் செய்யத் துணியாதீர்கள். சமுதாயத்தில் ஒழுங்கு கட்டுப்பாடு வளர உதவ வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரங்களும் மதங்களும்

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

எங்கள் சமயத்துக்கும் மரங்களுக்கும் காலம் காலமாக இருந்துவரும் நெருங்கிய தொடர்பினை இன்றைய சிந்தனைக்கு எடுத்துக்கொள்வோம்.

சில சமயங்களில் சற்று சிந்தித்துப் பார்த்தால் மரங்கள் எமக்கு உதவுகின்ற அளவுக்கு மனிதர்கள் உதவுவதாகத் தெரியவில்லை. நம்பி நாம் மரத்தின் பயன்களை எதிர்பார்த்து பெறலாம். ஆனால் மனிதனிடம் அவ்வாறு எதிர்பார்க்க முடிவதில்லை. சில சமயம் ஏமாற்றம்தான், பல சமயம் என்றும் கூறலாம். இல்லையா?

மரங்கள் செல்வங்களே. அவை புனிதமானவை, தன்னலம் அற்றவை, பயன் பல தருபவை.

ஆதிகாலம் தொட்டே மரங்கள் மனிதனின் வாழ்க்கையில் வேர் விட்டு வளர்ந்துள்ளன. அவை உணவாக உடையாக உறையுளாக எம்மவருக்கு உதவி வந்தன, வருகின்றன.

மரஉரி முனிவர்களின் புனித ஆடையாக அமைந்தது. பண்டைய தழையாடை இன்றும் மாரியம்மன் வழிபாட்டில் வேப்பமிலை ஆடையாக விளங்குவதைக் காணலாம்.

மரத்தின் மரப்பொந்துகள் ஆதி மனிதனின் உறையுளாக அமைந்தன. பயன் காரணமாக ஆதி மனிதன் மரங்களை வழிபட ஆரம்பித்தான்.

மரங்கள் மருந்துகள் தயாரிக்க பயன்படலாயின. இன்றும் பயன்பட்டு வருகின்றன. மரத்திலிருந்து எடுக்கப்பட்டது மருந்து எனப்பட்டது. தாவரங்களின் மூலசக்தி மூலிகையானது மரம் விதையாய் வேராய், கொழுந்தாய், இலையாய், சருகாய், காயாய், கனியாய், வற்றலாய், சாறாய், பட்டையாய், பாலாய், விறகாய் பற்பல அவதாரங்களை எடுத்து மக்களுக்கு உதவும் தெய்வ சக்திகளாக விளங்கி வருகின்றன என்று கூறலாம் அல்லவா! எனவே மரங்கள் வழிபடத்தக்கவை. வழிபட வேண்டியவை.

மர வழிபாடு உலகம் முழுவதும் பரவி இருந்தது. இயற்கையில் இறைவனைக் காணலாம் என்பது இதனைத்தான். ஆபிரிக்கா, அமெரிக்கா, போலந்து, கிறீஸ், பிரான்ஸ் வாழ் பழங்குடி மக்களிடமும் மர வழிபாடு இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. பாரதத்தில் தமிழகம் முழுவதுமே மர வழிபாடு இருந்துள்ளமை கண்கூடு. குறிப்பாக அரசமர வழிபாடு, வேப்பமர வழிபாடு எங்கும் எக்காலத்திலும் நிலைத்து நின்று வருகின்றது. இவற்றோடு வன்னிமரம், நெல்லிமரம், குருந்தமரம், வில்வமரம் ஆகியவை முக்கியம் வாய்ந்தவை. மணிவாசகப் பெருமான் குரு உபதேசம் பெற்றமை குருந்தமர நிழலில்தான். இந்து மதத்தில் மரங்கள் பல வகைகளில் வழிபடப்பட்டு வருகின்றன.

முதலில் மரங்களை இறைவனாக வழிபடுதல் ஒரு வகை. அரசு, வேம்பு முதலிய மரங்களை இறைவனது திருமேனியாக கருதி வணங்குவது ஒரு வகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரங்களில் இறைவன் உறைகின்றான் என்று கருதி வழிபடுதல் ஒரு வகை. தல விருட்சங்களை வழிபடுதலும் மற்றுமொரு வகை.

அரசமரம் மும்மூர்த்திகளின் உறைவிடம் எனக் கொள்ளப்படுவதை யாம் அறிவோம்.

அரச மரத்தின் வேர்ப்பகுதியில் பிரம்மனும், தண்டுப் பகுதியில் விஷ்ணுவும், கிளைப் பகுதியில் சிவனும் உறைகின்றனர் என்பது நம்பிக்கை. மும்மூர்த்திகளின் உறைவிடமான இம் மரத்தை "தேவாத்மா" எனப் போற்றுகின்றனர். எனவே அரச மரத்தை வழிபட்டால் மும்முர்த்திகளை வழிபடும் பயன் கிடைக்கின்றது எனக் கொள்ளலாம்.

கிருஷ்ணபகவான் அரசமரத்தில் எப்போதும் குடிகொண்டுள்ளார் என்பதால் அரசுக்கு கிருஷ்ண வாசம் என ஒரு நாமமும் உண்டு. மரங்களில் நான் அரசமரமாக உள்ளேன் என்கிறது கீதை வாசகம்.

அரச மரத்தை வலம் வந்து வணங்குதல் புண்ணிய காரியமாகும் என மனு தர்ம சாஸ்திரம் விதித்துள்ளதை இங்கு தொடர்புபடுத்திப் பார்க்கலாம்.

மரங்களின் அடியில் இறைவடிவத்தை பிரதிட்டை செய்து வழிபடுவதும் ஒரு வழக்கமாகும். அரச மரத்து விநாயகர் வழிபாடு இத்தகையதே.

வடமொழியில் அரசமரத்திற்கு போதிமரம் என்றும் ஒரு பெயர் உண்டு. அதாவது ஞானம் தருவது என்பது இதன் பொருள். அரசமரம் தெய்வத்தன்மை உடைய எல்லோராலும் விரும்பப்படும் அழகான மரம் ஆகும். இதுவே மரங்களுக்கெல்லாம் அரச மரமுமாகும். முற்காலத்தில் அரச மரத்தின் சமித்துக்கள் அதாவது சுள்ளிகள் வேள்வித் தீயில் பயன்படுத்தப்பட்டு, பின் அவற்றின் சாம்பல் திருநீறாகக் கொள்ளப்பட்டது.

விநாயகப் பெருமான் விரும்பி உறையும் இடங்களில் அரசமரத்தடியும் ஒன்றாகும். மரக்கிளைகளால் அமைந்த கோயிலை முற்காலத்தில் "கோட்டம்" என்றழைத்தனர். அரச விநாயக தர்ம கோட்டங்கள் ஏராளமாகத் தமிழ் நாட்டில் இன்றும் உள்ளன.

போதி மரத்துப் புத்த பிரான் இதற்கு விதிவிலக்கானவர் அல்ல. அவர் ஞானம் பெற்றதே அரசமரத்தின் கீழ் அமர்ந்துதான்.

வன்னிமரமும் புனிதத் தன்மை வாய்ந்தது. வாழை மரம் ஆலய உற்சவங்கள் மங்கல காரியங்கள் ஆகிய நிகழ்வின்போது பயன்படுத்தப்படுகின்றன. இந்த வகையில் மரங்கள் மனித வாழ்க்கையில் பின்னிப் பிணைந்துள்ளன என்று கூறலாம்.

நாள்தோறும் மரங்களை வழிபாடு செய்த காலம் போய் மரங்களை வெட்டி வீழ்த்தி மாட மாளிகைகளைக் கட்டி எழுப்புதலே இன்று நம்மவரது முதற்காரியமாக உள்ளது. இதனால் வளமும் மழையும் நிழலும் நிம்மதியும் குன்றிவருவதை யாம் உணர்கின்றோம்.

எனவே, இனிமேல் தன்னும், பெரு விருட்சங்களை வெட்டி வீழ்த்தாது, இயற்கையில் உறையும் இறைவனைப் போற்றித் துதித்து பழமை பேணுவோம். பலனைப் பெறுவோம். புதிய மரக்கன்றுகளை நாட்டுவோம். செய்வோமா?

***சத்தியம் உள்ள இடத்தில்தான் மெய்யறிவு இருக்கும்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மரபுகளால் பெரிதும் அறியப்படும் இருபதாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட யாழ்ப்பாணத்து இந்து ஆலயங்கள்

தொடர்ச்சி....

*– திரு சண்முகலிங்கம் சஜீலன்* அவர்கள் –

## புராண படனமும் பிரசங்க மரபும்

புராணபடனம் ஈழத்தில் மிகவும் சிறப்பாகக் கைக்கொள்ளப்பட்ட இலக்கிய மரபாக இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சோழ அரசர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட புராணபடனம் தமிழரசர் காலத்தில் மிகச் சிறப்பாகப் பேணப்பட்டு வந்தது. ஐரோப்பியர் ஆட்சியில் முற்றாக வீழ்ச்சியடைந்த இம்மரபு மீண்டும் 18ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆரம்பித்து இன்றும் கைக்கொள்ளப்பட்டு வருவதைக் காணலாம். வடமொழியில் தோன்றிய புராணங்கள் வளர்ச்சியடைந்து தமிழகத்திலும் பின்னர் ஈழத்திலும் பரவியுள்ளது. புராணபடனம் ஈழத்தின் தமிழ்ப் பிரதேசங்களில் சைவ சமயத்தை சார்ந்த மக்களுக்கு சமய தத்துவ உண்மைகளையும் சைவ சித்தாந்தக் கருத்துக்களையும் எடுத்துக் கூறும்பொருட்டும் அக்காலத்தில் மேற்கொள்ளப் பட்ட கிறிஸ்தவ மத மாற்றச் செயற்பாடுகளைத் தடுத்து மக்களை தமது தாய்ச் சமயத்தில் வாழ வைக்கும் பொருட்டும் சைவ சமய அறிஞர்களால், புலவர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் மிகவும் சிறப்பாகவே கையாளப்பட்டு வந்த இம்மரபு 19ஆம் நூற்றாண்டு முழுவதும் ஆறுமுகநாவலரதும் அவரைச் சார்ந்தவர்களதும் செயற்பாடுகளால் மிகவும் உச்ச நிலையைத் தொட்டு நின்றதெனலாம். பொதுவாக புராணபடனங்கள் கந்த புராணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், திருச்செந்தூர்ப்புராணம், சிவராத்திரிப் புராணம் போன்ற புராணங்களை படித்து அவற்றிற்கு பொருள்கூறும் மரபு கைக்கொள்ளப்பட்டு வந்துள்ளது. கச்சியப்பசிவாச்சாரியரால் அருளிச் செய்யப்பட்ட கந்தபுராணமும், சேக்கிழாரால் அருளிச் செய்யப்பட்ட பெரியபுராணமும் புராணபடன அறிஞர்களால் பெரிதும் கையாளப்படும் இரு புராணங்களாகும். இவற்றுள் கந்தபுராணப் படிப்பே மக்களை அதிகம் கவர்ந்ததாகவும், மக்களிடம் செல்வாக்குப் பெற்றதாகவும் இருந்துள்ளது. புராணபடனம் கோயில்கள், மடங்கள், திண்ணைப்பள்ளிகள், வீடுகள், தொழில் நிலையங்கள் ஆகியவற்றிலேயே அதிகம் நிகழ்ந்து வந்ததை அறியமுடிகிறது. இவற்றுள் கோயில்களில் நிகழ்ந்த புராணபடனமே பலதரப்பட்ட மக்களையும் ஈர்த்ததுடன் பெருமளவானோர் குழுமியிருந்து கேட்கும் புராணபடனமாகவும் இருந்துள்ளது. 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கூழங்கைத் தம்பிரான், நெல்லைநாதர், மயில்வாகனப் புலவர், வரத பண்டிதர், இராமலிங்க முனிவர், கணபதி ஐயர், சு. நமச்சிவாயப் புலவர், இணுவில் சின்னத்தம்பிப் புலவர், சின்னக்குட்டிப் புலவர் ஆகியோர் சுன்னாகம்,

*நல்ல நம்பிக்கையில் உருவாகும் கருத்துக்கள் என்றுமே அழிவதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதகல், காரைநகர், தெல்லிப்பளை, அராலி, நல்லூர், வட்டுக்கோட்டை, அச்சுவேலி, இணுவில், வண்ணார்பண்ணை, மாவிட்டபுரம் ஆகிய இடங்களில் மீளக் கட்டியெழுப்பப்பட்ட தலங்களில் புராணப்படிப்பையும், கதைநூல் படிப்பையும் செய்துள்ளனர். 19ஆம் நூற்றாண்டில் ஆறுமுகநாவலரும் அவரது மாணவர் பரம்பரையினரான ச.ந. பொன்னம்பலம்பிள்ளை, மட்டுவில் ம.க. வேற்பிள்ளை, காசிவாசி செந்திநாதையர், வேலணை வி. கந்தப்பிள்ளை, பீதாம்பரப்புலவர், முத்துக்குமாரப் புலவர், மாவை பொன்னம்பலப்பிள்ளை, உடுப்பிட்டி சிவசம்புப்புலவர், சுன்னாகம் முருகேச பண்டிதர், அளவெட்டி கனகசபைப்புலவர் ஆகியோரும் புராணபடனங்களிற் சிறந்து விளங்கியுள்ளனர். 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், "புலோலி நா. கதிரைவேற் பிள்ளை, புன்னாலைக்கட்டுவன் கணேசையர், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, சு. சிவபாதசுந்தரம், தென்கோவைப் பண்டிதர் ச. கந்தையாப்பிள்ளை, நவாலி க. சோமசுந்தரப் புலவர், வேலனை பேரம்பலப் புலவர், சாவகச்சேரி க. பொன்னம் பலப்பிள்ளை, பருத்தித்துறை முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் ஆகியோர் புராணபடன மரபை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் சென்று வளர்ச்சியடையச் செய்தவர்களாவர்.

ஆலயங்களில் நடைபெறும் புராணபடனங்களில் கந்தபுராணம் பொதுவாக மூன்று மாதம் படிக்கப்படும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், செல்வச்சந்நிதி முருகனாலயம், நல்லூர் கந்தசுவாமி கோவில், பொலிகண்டி கந்தவனக்கடவை முருகன் கோவில், இணுவில் கந்தசுவாமி கோவில் உட்பட யாழ்ப்பாணத்திலுள்ள சகல முருகன் ஆலயங்களிலுமே நடைபெறுகிறது. இவைதவிர பிள்ளையார், அம்மன், சிவன், ஆலயங்களிலும் இப் படிப்பு நடைபெறும். பெரியபுராணம் மூன்று மாதங்கள், அல்லது அதற்கும் குறைவான காலங்கள் நடைபெறுவதோடு ஆலயங்களிலும், மடங்களிலும் நடைபெறும். தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோவிலிலும், விழிசிட்டி ஞானவைரவர் கோவிலிலும் மூன்று மாதம் படிக்கப்படுகிறது. ஏழாலை நாவலர் மடம், நல்லூர் மடம் ஆகியவற்றிலும் நடைபெறுகிறது. 19ஆம் நூற்றாண்டில் மக்களின் வரவேற்பைப் பெற்று மிகச் செல்வாக்குடன் திகழ்ந்த புராணபடன மரபு 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து செல்வாக்கிழக்கத் தொடங்கியது. இதற்கு புராணபடனம் செய்வோரில் ஏற்பட்ட சில குறைபாடுகளும் புராணபடனம் கேட்போரில் ஏற்பட்ட சில மாறுதல்களும் காரணமாகக் கொள்ளப்படுகிறது. எனினும் இன்றும் புராணபடனம் ஆலயங்களில் மட்டுமே நிகழ்வதுடன் அவையும் சம்பிரதாயமாகவே நடைபெறுவதும் குறிப்பிடத்தக்கது.

19ஆம் நூற்றாண்டில் பிரசங்கம் செய்தல் எனும் புதிய இலக்கிய வடிவமொன்று நிலைபெறத் தொடங்கியது. இது சைவ சமய வளர்ச்சியினை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் சென்றது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களே இதன் பிதாமகராகக் காணப்படுகின்றார். வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் 31.12.1847இல் தனது முதலாவது பிரசங்கத்தை நிகழ்த்தினார். அதன் பின் யாழ்ப்பாணத்திலும், யாழ்ப்பாணத்திற்கு வெளியிலும் பல நிகழ்த்தி யுள்ளார். யாழ்ப்பாணத்தில் மானிப்பாய் வேலக்கை பிள்ளையார் ஆலயம், பருத்தித்துறை சித்தி விநாயகர் ஆலயம் ஆகியவற்றில் இவரது பிரசங்கங்கள் நடைபெற்றுள்ளது. சைவ சமயம், கடவுட்கொள்கை, சைவ சித்தாந்தக் கருத்துக்கள், சைவ சமயிகள் கடைப்பிடிக்க

*சுறுசுறுப்புடன் செயல்படுகிறவனுக்குத்தான் இந்த உலகம் சொந்தம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய வாழ்க்கை நெறிமுறைகள், சைவ சமயச் சின்னங்கள், அவற்றை அணியவேண்டிய முறைகள், அணிவதால் ஏற்படும் பயன் எனப் பலவற்றையும் எல்லோரும் புரிந்து கொள்ளும்படி மிகவும் எளிதான முறையில் பிரசங்கம் செய்தார். இதனால் பலதரப்பட்ட மக்களும் ஆலயங்களை நோக்கி ஈர்க்கப்பட்டனர். ஆலயங்களில் குழுமினர். இக்காலத்தில் கந்தபுராணம், பெரியபுராணம், திருச்செந்தூர்ப் புராணம், தலபுராணம் ஆகிய செய்யுள் வடிவிலமைந்த புராண நூல்கள் உரைநடையில் பதித்து வெளியிடப்பட்டன. இது இக்காலத்தில் கல்வியறிவு பெற்ற மக்கள் தாமே நூலைப் படித்து சமயக் கருத்துக்களை அறிந்துகொள்ளும் வாய்ப்பை உருவாக்கியது. வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலும் அதனைச் சூழ அமைந்திருந்த பல மடங்களும் ஆறுமுக நாவலரதும் அவரைச் சார்ந்தோரதும் பிரதான செயற்பாட்டுக் களமாக அமைந்திருந்தது. வைத்தீஸ்வரன் கோவிலில் ஆறுமுக நாவலரைத் தொடர்ந்து வித்துவ சிரோன்மணி பொன்னம்பலப்பிள்ளை, சங்கர சுப்பையர், நாகலிங்க சுவாமிகள், பண்டிதர் மாணிக்கத்தியாகராசா, நல்லை ஆதீனக்குரு சுவாமிநாதத் தம்பிரான் ஆகியோர் பிரசங்கங்களை நிகழ்த்தியுள்ளனர்.

20ஆம் நூற்றாண்டில் தமிழகத்தைச் சேர்ந்த திருமுருக கிருபானந்தவாரியார் யாழ்ப்பாணத்தில் பல முருகன் ஆலயங்களிலும் கி.வா. ஜகநாதன் யாழ்ப்பாணத்தின் பிரபல சைவ ஆலயங்களிலும் பிரசங்கங்களை, சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளனர். அத்துடன் ஈழத்து அறிஞர்கள் பலரும் இக்காலத்தில் ஆலயங்கள் பலவற்றிலும் சொற்பொழிவாற்றியுள்ளனர். பிரசங்கங்களாலும், சொற்பொழிவுகளாலும் மிக வேகமாக வளர்ச்சியடைந்த ஆலயமாக தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தினைக் கொள்ள முடியும். கி.பி. 1750 - 55 ஆண்டு காலப்பகுதியில் கதிர்காமர் எனும் சைவப்பெரியார் இந்தியாவின் காசிக்கு தீர்த்த யாத்திரை மேற்கொண்டு அங்கிருந்துகொண்டு வந்த துர்க்காயந்திரம், திருமுக வெண்கலத் தீர்த்தக்கெண்டி ஆகியவற்றை உழுகுடைப்பதி எனும் இடத்தில் பிரதிஷ்டை செய்து வழிபாட்டை ஆரம்பித்தார் எனக் கூறப்படும். இவ் ஆலயம் 1965ஆம் ஆண்டிற்குப் பின்னர் சிவத்தமிழ்ச் செல்வி என எல்லோராலும் அறியப்பட்ட செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி என்னும் அம்மையாரின் நிர்வாகத்தாலும் மிக முக்கியமாக அவரது சமயச் சொற்பொழிவிலும் மிகப் பெரும் வளர்ச்சி கண்டது. ஆறுமுகநாவலர் வழியில் அவரது அடியினையொற்றி பணி செய்த இவ்வம்மையார் இவ்வாலயத்தில் பிரசங்க சொற்பொழிவுகளை மேற்கொண்டதுடன் யாழ்ப்பாணத்தின் பல ஆலயங்களிலும் சொற்பொழி வாற்றி மக்களைச் சைவசமயத்தின்பால் ஈடுபாடுகொள்ளச் செய்தார். இவரது சொற்பொழிவைக் கேட்பதற்கென்று துர்க்கையம்மன் ஆலயத்தை நோக்கி பல ஊர்களிலுமிருந்தும் மக்கள் வந்தனர். சிங்கப்பூர், மலேசியா, இந்தியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளிலும் பல சமய சொற்பொழிவுகளையும் ஆற்றியுள்ளார். இவ்வாறாக சொற்பொழிவுகள்மூலம் பெறப்பட்ட நிதியில் ஆலயத்தில் பல திருப்பணிகளை நிறைவேற்றியுள்ளதுடன் பல அறப்பணிகளையும் செய்தார். இவரது சொற்பொழிவுகள் பெரும்பாலும், கடவுள் வழிபாடு, சைவ சித்தாந்தம், திருத்தொண்டர் புராணம், திருமுறைகள் ஆகியவற்றின் கருத்துக்களையும் சாரம்சத்தையும்

*காத்துக்கொண்டிருப்பவனுக்குக் காலம் ஒவ்வொரு கதவையும் திறக்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கியதாகவே இருக்கும். தமிழக ஈழ அறிஞர்கள் பலர் இங்கு சொற்பொழிவாற்றியுள்ளனர். இன்றும் இச்சொற்பொழிவுப் பாரம்பரியம் ஆலயத்தில் தொடர்கிறது. இவ்வாறாக ஒரு சொற்பொழிவுப் பாரம்பரியத்தினூடாக உலகில் முதன்மை பெற்ற ஆலயமாக தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயம் விளங்குகிறது.

இருபதாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட யாழ்ப்பாணத்து இந்து ஆலயங்கள் வையாபாடல், தட்சிண கைலாய புராணம், கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை போன்ற தமிழ் வரலாற்று இலக்கியங்கள் மற்றும் பாளி, சிங்கள மொழி மூல வரலாற்று இலக்கியங்கள், தமிழ் மொழியிலமைந்த கல்வெட்டுக்கள், சாசனங்கள், தலங்களை மையப்படுத்தி தோன்றிய புராண இலக்கியங்கள், பிரபந்த இலக்கியங்கள், புராணபடனம் பிற்காலத்தில் தோன்றி நிலைபெற்ற பிரசங்கம், சொற்பொழிவு போன்ற இலக்கிய மரபுகளூடாக பெரிதும் அறியப்படுவதோடு அவை சைவத்தமிழ்ப் பண்பாட்டின் தொன்மை, மரபு, வரலாறு, தொடர்ச்சி ஆகியவற்றையும் நிலைநிறுத்திப் பாதுகாக்கின்றன. (முற்றும்)

---

ஒரு தந்தையிடம் மகன் தனக்கு ஏதேனும் ஒரு துன்பமோ அல்லது மனக்கவலையோ ஏற்படும்போது வந்து கலங்கி நிற்பான். அப்போது அவனது பிரச்சினையைக் கேட்ட பின் தந்தை ஒரே வார்த்தையில் இவ்வளவுதானா? உன் பிரச்சினை எல்லாம் சரியாகிவிடும் என்பார்.

அவனுக்கும் சில நாட்களில் அந்த பிரச்சினையோ துன்பமோ இல்லாது போய்விடும். அந்த மகனும் வளர்ந்தான். தந்தைக்கும் வயதானது அவரது மகன் தற்போதெல்லாம் எந்தப் பிரச்சினை வந்தாலும் தந்தையிடம் சிரித்துக்கொண்டே சொல்ல ஆரம்பித்தான். ஒருநாள் மகன் தந்தையிடம் கேட்டான், “ஏம்பா நான் எவ்வளவோ பெரிய பிரச்சினை என்று வந்தாலும் இவ்வளவுதானா? அப்படினு கேட்கிற எனக்கும் அந்தப் பிரச்சினை சுலபமாக முடிந்துவிடுகிறதே எப்படிப்பா?” என்றான்.

அந்த தந்தை சிரித்துக்கொண்டே சொன்னார், “சில வருடங்களுக்கு முன்னாடி பிரச்சினை என்றால் கண் கலங்குவ. நீ கலங்கும்போது அந்தப் பிரச்சினையை எப்படித் தீர்க்கிறது என்று உனக்குத் தெரியாமல் இருக்கும். நான் இவ்வளவுதானா? அப்படினு கேட்டதும் உன் மனம் இது ஒரு பிரச்சினையே இல்லை என்று ஒரு முடிவுக்கு வந்து அந்தப் பிரச்சினையும் முடிந்துவிடும். இப்போ எவ்வளவு பெரிய பிரச்சினை உன் முன்னாடி இருந்தாலும் அதற்கான தீர்வு மட்டும்தான் உனக்குத் தெரியும். சின்ன வயதில் எனக்கு ஏதாவது பிரச்சினை என்றால் பயமுறுத்த ஆள் இருந்தாங்களே தவிர தைரியம் சொல்ல ஆட்கள் இருக்கவில்லை. அதனால்தான் நான் எப்பவும் உன்கிட்ட எந்தப் பிரச்சினை வந்தாலும் இவ்வளவுதானா என்று கேட்பேன்” என்று சொன்னார்.

நாம எவ்வளவோ புத்திசாலியாக இருந்தாலும் ஒரு நிமிடம் இவ்வளவா அப்படி என்று நினைத்தால் நாம் அங்கேயே நின்றுவிடுவோம். ஆனால் இவ்வளவுதானா? அப்படி என்று நினைத்தால் அதை தாண்டி நாம் அடுத்த கட்டத்துக்குப் போய்விடுவோம்.

*மனதைத் தூய்மைபெறும் வழி ஆசைகளைக் குறைத்துக்கொள்வதுதான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகளின் பவளவிழாவினை முன்னிட்டு வரையப்பட்ட கட்டுரை

# மோகன தாரகை

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

ஞானச்சுடராக, ஞான விளக்காக, ஞான ஒளியாக, ஞான முகிலாக, ஞானக் கலசமாக, ஞானக் கொழுந்தாக, ஞானக்கருவூலமாக, ஞான விருட்சமாக, ஞானபோதினியாக, ஞானக் கரும்பாக, ஞான பல்லவியாக, ஞான சொருபியாக, ஞானமொழியாக உலக மக்களால் போற்றப்படுபவர், சந்நிதியான் ஆச்சிரம பீடத்தின் முதல்வராகத் திகழும் மோகன் சுவாமிகள் எனப்படும் மோகனதாஸ் ஐயா ஆவார்.

தவத்திரு மயில்வாகனம் சுவாமிகளின் சீடனாக விளங்கி, மாபெரும் தொண்டுகளை ஆற்றிவருகின்ற புண்ணியசீலராகச் சந்நிதியான் ஆச்சிரமத்தினை வழிநடாத்தி, ஆன்மீக விளைச்சலை இந்த மண்ணுக்கு ஈந்துள்ளார். பன்முக ஆளுமையின் அதிபதியாக, நிகரற்ற அருளாளனாக பவளவிழா நாயகனாகத் திகழ்ந்து வாழ்த்துக்களுக்குச் சொந்தக்காரராகின்றார்.

ரமண மகரிஷி அவர்கள் மயில்வாகனம் சுவாமிகளை ஆட்கொண்டு அன்னம்பாலிக்கும் பென்னம் பெரிய பணியை ஒப்படைத்ததுபோல, மயில்வாகனம் சுவாமிகளும், மோகன் சுவாமிகளையும் ஆட்கொண்டு அன்னம் பாலிக்கும் அட்சய பாத்திரத்தை உவந்து உபயமாக்கினார். அது இன்றுவரை இனிக்கிறது.

எதை எதை, எப்படி எப்படி, எவரெவர்க்கு, எப்போது, எந்த நேரம், எவரால் கொடுக்கப்பட வேண்டுமோ அது அது அந்தந்த நேரத்தில் அவரவர்க்கு வழங்கப்படுகிறது.

எது எது எப்படி இருப்பினும், தானம் ஆனது, நிதானம், அவதானம் பிரதானமாகும். இது செம்மையாக இயங்குமாக இருந்தால், தான தருமம் ஓங்கி, உலப்பிலா ஆனந்தம் பெருகும். இந்த கைங்கரியம் சந்நிதியான் ஆச்சிரம உபகாரங்களில் நெடிதுயர்ந்து கோடியின்பம் பயக்கிறது.

சந்நிதி முருகன், தான் விரும்பி மோகன் சுவாமிகளிடத்தே உறைவதனால், சமூகம் வேண்டும் அத்தனை வேண்டுதல்களுக்கும், முருகன் இரங்குகின்றான். அவன் கொடைவள்ளல்.

"முருகன் தருகின்றான் நான் கொடுக்கின்றேன்
என்னிடம் எதுவுமில்லை எல்லாம் அவன் செயல்"

இதுவே மோகன் சுவாமிகளது தாரக மந்திரம். அதுவே ஆச்சிரமத்தின் வழிபாடுமாகும். இத்தகு சிந்தனை எல்லோர் மனதிலும் விளையுமாயின் அறம் வென்று ஆன்மீகம் பாலிக்கும். ஆச்சிரமம் அன்றும் இன்றும் என்றும் அறம்பாலிக்கும் ஒரு அட்சய பாத்திரமாய் மிளிர்கிறது.

அன்னதானக் கந்தனாக செல்வச்சந்நிதியான் நீடித்து வாழ்வதுபோல, சந்நிதியான் ஆச்சிரமமும் அனைத்து தானங்களையும் சொந்தமாக்கியுள்ளான். அதன் பணிகள் அளப்பரியது.

*நீ நல்ல நண்பனை அடைய விரும்பினால் நீயும் நல்லவனாக இருக்க வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னதானப்பணி, கல்விப்பணி, சமூகப்பணி, சமயப்பணி, அனர்த்தப்பணி, மருத்துவப்பணி , ஞானச்சுடர்ப்பணி, அவசரகால இடர்ப்பணி, பாடசாலை, பௌதீகவளப்பணி, ஆதார ஆகார ஆசாரப்பணி, கலை கலாசாரப் பண்பாட்டு வளர்ச்சிப்பணி, ஆலய நித்திய நைமித்திய பூஜாவிருத்திப்பணி, கும்பாபிஷேக வேண்டுதல் பணி, ஆரம்ப முன்பள்ளியிலிருந்து பல்கலைக்கழகம் வரை கற்கும் மாணவர்களுக்கான சமயோசிதமான மற்றும் மாதாந்த நிதியுதவிக்கான உன்னதபணி, பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான நிவாரணப்பணி, அவசர தேவைகளுக்கான நிதியுதவுபணி, சிறுவர் முதியோர்களுக்கான அத்தியாவசியப்பணி, சுயதொழில் ஊக்கப்பணி, விவசாய நடவடிக்கைக்கான உதவும் பணி, சத்திர சிகிச்சைகளுக்கான நிதியுதவும் பணி, மூக்குக்கண்ணாடி தேவைப்படுவோருக்கான கண்ணாடி வழங்கும் பணி என்பதாக அல்லும் பகலும் ஆவனபுரியும் அத்தனை பணிகளும் தளராமல், தாழாமல், இடைவிடாது நேர்த்தியாக ஆற்றப்படுகிறது. இதைவிட 365 நாட்களும் இனம், மதம், மொழி, குல, நிற, ஜாதிய பேதங்களுக்கப்பால், நித்திய அன்னப்பணி சீராக நடைபெறுகிறது. இது இலங்கையில் தனித்துவமானதாகும்.

அடுத்த நூறாண்டுகளுக்குத் தக்கபடியான தலைமைகளை ஆளுமையாக வளர்த்தெடுக்கின்ற வல்லமைக்கு மோகன் சுவாமிகள் நல்லதோர் உதாரணமாகப் பிரகாசிக்கின்றார். சந்நிதியான் ஆச்சிரமத்தில் சுமார் பதினைந்து பெறுமதியானவர்கள் கடமையாற்றுகிறார்கள். சுவாமிகளின் விரலுக்கு அடிபணிந்து ஒழுக்கசீலர்களாகப் பொறுப்புணர்ச்சியோடு கடமையாற்றுகின்றார்கள்.

மேலும், ஆலயச் சூழலில் நிரந்தரமாக வாழ்ந்து வருகின்ற சுமார் அறுபது முதியவர்களுக்கு மூன்று நேரமும் உணவு வயிறாறப் பசியாற வழங்கப்படுகிறது. அத்துடன் காலை மாலை தேநீரும் சுடச்சுடப் பருகுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மற்றும் மாதாந்தம் 2100 ஞானச்சுடர் இதழ்கள் உள்நாடு வெளிநாடு இரண்டுக்குமாக உரியவர்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. இதன்மூலம் ஆன்மீக வாசகர்கள் ஏராளமானவர்கள் வசீகரிக்கப்பட்டுள்ளனர். கூடவே, எழுத்தாளர்கள் வரவேற்கப்பட்டு ஊக்குவிக்கப்படுகின்றனர். இதன்மூலம் சமயம், தமிழ், கலை, பண்பாடு, திருவாசக விழா, தவத்திரு மயில்வாகனம் சுவாமிகள் குருபூஜை, தவத்திரு முருகேசு சுவாமிகள் குருபூஜை, அருணகிரிநாதர் குருபூஜை, நாவலர் குருபூஜை, கௌரவிப்புக்கள், பண்ணிசைப் போட்டி, பரிசளிப்பு, வாசகர்களுக்கான போட்டி என யாவுமாகிய ஆன்மீகப்பேறுதன்னை சமூகத்திற்கு நேர்த்தியாகக் கையளிக்கப்படுகின்றது. இதற்கப்பால் ஒவ்வொரு வெள்ளிதோறும் கலைசார்ந்த இசை, நடன, வில்லுப்பாட்டு, கதாப்பிரசங்கம், உபந்நியாசம், பேச்சு, தொடர் பேச்சு, நிறைவாக இறுதி வெள்ளியன்று ஞானச்சுடர் வெளியீடும் அரங்கேற்றப்படுகிறது. ஆன்மீக ஆளுமையால் 31.08.2024இல் பவளவிழாவினை வென்று, (1000) ஆயிரம் பிறை கண்டு, நூற்றாண்டு காலமதைப் பேறாக வாழ்ந்திட வேண்டுமெனக் காலம் கரங்கூப்புகின்றது.

*வெற்றியின் அடிப்படை எடுத்த செயலில் நிலையாக நிற்பதே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 100000. 00 |
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| இ. சிவராஜா (இலங்கை வங்கி) | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| செ. கவிதா | லண்டன் (வல்வெட்டி) | 15000. 00 |
| சி. லக்ஷ்மன் | பருத்தித்துறை | 10000. 00 |
| டனாஸ் | லண்டன் | 15000. 00 |
| சுசீலா நகை மாடம் | பருத்தித்துறை தேங்காய், 1மூடை அரிசி | |
| சி. தங்கவடிவேல் (சிற்றி வெதுப்பகம்) | தும்பளை | 1மூடை மா |
| சுந்தரம் மருந்தகம் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| திரு குகநேசன் குடும்பம் | சித்தங்கேணி | 5000. 00 |
| வே. நடராஜா குடும்பம் | அல்வாய் | 5000. 00 |
| K. ஜெயமோகன் | கைதடி | 2000. 00 |
| த. வைகுந்தவாசன் | இணுவில் | 10000. 00 |
| திரு சந்திரபோஸ் | இணுவில் | 6000. 00 |
| திரு ஜெகதீஸ்வரன் குடும்பம் | கனடா | 20000. 00 |
| திரு வரதராஜன் குடும்பம் | லண்டன் | 50000. 00 |
| திரு ஜெகதீஸ்வரன் குடும்பம் | சுவிஸ் | 3000. 00 |
| N. முகுந்தன் | புலோலி | 5000. 00 |
| யோ. கிஷான் | லண்டன் | 11000. 00 |
| K.S. சிவஞானம் | டென்மார்க் | 2500. 00 |
| யோ. கௌரி | நல்லூர் | 3000. 00 |
| சு. கோசலகோபன் | உடுப்பிட்டி | 1000. 00 |
| மயில்வாகனம் குகன் | அவுஸ்ரேலியா (தொண்டைமானாறு) | 50000. 00 |
| கு. தகீசன் | ஊரிக்காடு | 10000. 00 |
| செ. உதயகுமாரன் | ஜேர்மன் | 5000. 00 |
| மு. சற்குருசரவணபாபா | பாளைக்காடு | 5000. 00 |
| சங்கரப்பிள்ளை நினைவாக | மரக்கறி 3பட்டி அரிசி | |
| கி. கவின், ர. மகதி | திருகோணமலை | 20000. 00 |
| திரு தணிகாசலம் குடும்பம் | கைதடி | 10000. 00 |
| திரு கேதாரசர்மா குடும்பம் | கொக்குவில் | 20000. 00 |
| ச. சயந்தன் | இணுவில் | 1500. 00 |
| தி. தேவராசன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |

*அநேக உண்மைகள் வேடிக்கைப் பேச்சிலே வெளியாகி விடுகின்றன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| அ. உமா | சுவிஸ் (தொண்டைமானாறு) | 35000. 00 |
| செ. கவிதா | கொக்குவில் | 5000. 00 |
| க. பிரபாகரன் | இணுவில் | 20000. 00 |
| ஐ. கணேசமூர்த்தி | இணுவில் | 2500. 00 |
| திரு வசந்தகுமார் | உடுவில் | 1000. 00 |
| திரு சண்முகராஜா குடும்பம் | அவுஸ்திரேலியா | 20000. 00 |
| பொ. நல்லையா நினைவாக | கனடா | 5000. 00 |
| ச. உதயகுமார் | கரணவாய் | 10000. 00 |
| தயாளினி சுகுமாரன் | கனடா | 100 டொலர் |
| S. பாலசுப்பிரமணியம் | கனடா | 3000. 00 |
| தே. பொகான் | கொக்குவில் | 2000. 00 |
| S. பிரபாகரன் | கனடா | 5000. 00 |
| இ. இனோசன் | மட்டுவில் | 5000. 00 |
| செ. சுகுமார் | கல்வியங்காடு | 5000. 00 |
| திரு கணேஸ் குடும்பம் | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| திருமதி நடராஜா | கொழும்பு | 20000. 00 |
| செ. சுகுமாரன் | கனடா | 5000. 00 |
| ம. வசந்தகுமார் | பிரான்ஸ் | 10000. 00 |
| கா. கணேசநாதன் | டென்மார்க் | 10000. 00 |
| நவரத்தினம் லீலாவதி | காரைநகர் | 20000. 00 |
| T. கிருபாகரி | திருகோணமலை | 1000. 00 |
| இ. சுகிர்தா | இருபாலை | 15000. 00 |
| திரு கோகுலன் குடும்பம் | லண்டன் | 5000. 00 |
| திரு கணேசலிங்கம் குடும்பம் | லண்டன் | 5000. 00 |
| ம. சுதா | ஜேர்மன் | 10000. 00 |
| கோ. தாட்சாயிணி | சாவகச்சேரி | 5000. 00 |
| ந. யோகானந்தீஸ்வரக்குருக்கள் | ஆவரங்கால் | 1000. 00 |
| ரா. ராதேஸ் | இணுவில் | 3000. 00 |
| வே. சரோஜினி | லண்டன் | 10000. 00 |
| அ. அபிநயா | கனடா | 5000. 00 |
| இ. பத்மாசன் | கனடா | 5000. 00 |
| P. செல்வநாதன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| லக்சினா மயூதரன் | கனடா | 30000. 00 |
| டியன் கிரிதரன் | ஜேர்மன் | 3000. 00 |
| ச. சுஜீபன் | ஏழாலை | 10000. 00 |
| த. சாமந்தி | கனடா | 5000. 00 |
| இ. சிவனேஸ், இ. மகேஸ்வரி | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| பொ. முகுந்தன் | அவுஸ்திரேலியா | 1புட்டி அரிசி |

*வெற்றி என்பது மதிக்கத் தகுந்த இலக்கை நோக்கி முன்னேறுவதை உணர்த்துவதேயாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| திரு விஜிதானந்தன் குடும்பம் | நோர்வே | 5L தே.எண்ணெய், 1மூடை அரிசி |
| த. சந்திராதேவி | சுன்னாகம் | 5000. 00 |
| க. ஹரன் | அரியாலை | 2000. 00 |
| வேலும் மயிலும் அரிசி ஆலை | பரந்தன் | 2மூடை அரிசி |
| திரு செல்வரட்ணம் குடும்பம் | கனடா | 5000. 00 |
| ந. சண்முகநாதன் | இணுவில் | 1மூடை சீனி, தேயிலை, 1புட்டி அரிசி |
| செ. சாந்தரூபன் | செங்கலடி | 500. 00 |
| சி. குகப்பிரதாஸ் | வல்வெட்டித்துறை | 25000. 00 |
| வ. ஆனந் | நல்லூர் | 5000. 00 |
| சபா கணேசா | லண்டன் | 1000. 00 |
| P. பாலசிங்கம் | கைதடி | 1900. 00 |
| நி. வசந்தராணி | நெடியகாடு | 10000. 00 |
| கு. இந்திரகுமாரி | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| க. பிரவின் | கொக்குவில் | 5000. 00 |
| ப. பாலகோபி | கொக்குவில் | 5000. 00 |
| கா. இராஜலிங்கம் | கொக்குவில் | 5000. 00 |
| பொ. திருச்செல்வம் | அரியாலை | 5000. 00 |
| T. நித்தியரூபன் | அச்செழு | 1000. 00 |
| ம. செல்வராணி | நீர்வேலி | 1000. 00 |
| சு. ரஞ்சிதமலர் | நீர்வேலி | 1000. 00 |
| சி. இந்திராணி | நீர்வேலி | 1000. 00 |
| திரு தியாகராஜா குடும்பம் | சுவிஸ் | 5000. 00 |
| திரு செல்லத்துரை குடும்பம் | புங்குடுதீவு-10 | 5000. 00 |
| கோ. ஸ்ரீரஞ்சன் | நல்லூர் | 5000. 00 |
| க. மேகலை | உரும்பராய் (பிரான்ஸ்) | 5000. 00 |
| இ. சந்திரகுமார் | உரும்பராய் | 7புட்டி அரிசி |
| இ. தனபாலசிங்கம் | கோண்டாவில் | 1புட்டி அரிசி 1000. 00 |
| நி. ஆருஷன் | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| த. சயந்தன் | கரவெட்டி கிழக்கு | 10000. 00 |
| தேவன் ஸ்ரோர்ஸ் மூலம் Dr ஏ. ராஜநாதன் | ஆவரங்கால் | 10000. 00 |
| ம. நிஷாந்தன் | ஏழாலை | 2000. 00 |
| க. பாலச்சந்திரன் | மீசாலை | 5000. 00 |
| திரு பரனிருபன் குடும்பம், திரு தர்சன் குடும்பம், லோஜி குடும்பம் | யாழ்ப்பாணம் | 3புட்டி அரிசி 5000. 00 |
| ந. ஜெயக்குமார் | துன்னாலை | 10000. 00 |
| ரஜனி குடும்பம் | கனடா | 15000. 00 |
| பா. ராஜினி | மாலிசந்தி | 5000. 00 |

*அரிய காரியங்கள் பெரிய உழைப்பின்றி ஒருபோதும் முடிந்ததில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சி. செல்வரட்ணம் | இணுவில் | 5000. 00 |
| இ. கோகுலன் | கோண்டாவில் | 5000. 00 |
| ஜெ. ஓவியன் | சோழங்கன் | 2000. 00 |
| திருமதி ச. சாந்தினி மூலம் நற்குணம் நினைவாக கனடா | | 5000. 00 |
| தெ. விநாயகநாதன் | பருத்தித்துறை | 5000. 00 |
| திரு சோமகுமாரன் குடும்பம் | தும்பளை | 1000. 00 |
| அ. கந்தசாமி, க. பிரதீபா | கதிரிப்பாய் 1புட்டி அரிசி | 5000. 00 |
| த. சதுர்த்தியா | சுவிஸ் | 10000. 00 |
| S. கெவின்ஷன் | தெல்லிப்பழை | 500. 00 |
| க. மகேஸ்வரி | தம்பசிட்டி | 1000. 00 |
| R. ஸ்ரீசியாமளன் | சிறுப்பிட்டி | 1500. 00 |
| ப. கீதனா, ப. சாந்தாதேவி | பருத்தித்துறை | 5000. 00 |
| ஜெ. ஜெயா | கனடா | 3000. 00 |
| க. அருந்தவமலர் | கம்பர்மலை | 1மூடை அரிசி |
| செ. அக்சிதா, செ. அக்சியா | துன்னாலை | 10000. 00 |
| தி. சயன் | நோர்வே | 15000. 00 |
| ஏ. மயூரி, ஏ. மகிழினி | வல்வெட்டித்துறை | 4000. 00 |
| வி. திருநேயன் | நவிண்டில் | 20000. 00 |
| திரு வேலாயுதம் குடும்பம் | சங்கானை | 1000. 00 |
| யோ. மனஸ்வினி | நவாலி | 500. 00 |
| பி. அக்ஷரா | புத்தூர் | 2000. 00 |
| A. கேதீஸ்வரன் | நெல்லியடி | 5000. 00 |
| அ. சண்முகரட்ணம் | நல்லூர் (சமூகப்பணிக்காக) | 100000. 00 |
| க. விசாலாட்சி, தி. சத்தியா | மந்திகை | 5000. 00 |
| ம. அனித்தா | வல்வெட்டி | 5000. 00 |
| சி. திசாந்தன் | குப்பிளான் | 1000. 00 |
| தி. வைதேகி | கனடா | 5000. 00 |
| தி. கவிநயன் | கோண்டாவில் | 1000. 00 |
| M. சிவகாமி | ஏழாலை | 5000. 00 |
| வி. கோகுலன் | தெல்லிப்பழை | 5000. 00 |
| திரு சிவபாதசுந்தரம் குடும்பம் | வண்ணார்பண்ணை 6புட்டி அரிசி | 5000. 00 |
| து. நாகேந்திரம் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| ஆ. கந்தையா | பருத்தித்துறை | 3000. 00 |
| திரு பாலச்சந்திரன் குடும்பம், ப. பிரவின், ப. மதுரசி | கோண்டாவில் | 5000. 00 |
| செ. வரலக்ஷிமி | தெல்லிப்பழை | 5000. 00 |
| செ. சுஜாதா | தெல்லிப்பழை | 5000. 00 |

(தொடரும்...


**குறைகளைக் கண்டு திருத்திக்கொள்பவனே திறமையானவன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகின்றோம்

– திரு கி. குலசேகரன் அவர்கள் –



வல்வெட்டித்துறை பெற்ற வல்லாளனே! எங்கள்
வடமராட்சி மண்ணுக்கு வரமாய்க் கிடைத்தவரே!
செல்வச் சந்நிதியான் அடிபணிந்து, சிறப்பான
சேவைகளைச் செய்து மனங்களை வெல்பவரே!
நல்லவரே எழுபத்து ஐந்தாம் அகவையினை
நிறைவாகக் கொண்டாடும் வேளைதன்னில்
எல்லோருமே சேர்ந்து உமை வாழ்த்துகின்றோமே!
என்றென்றும் தமிழ்போலும் நீடூழி வாழியவே!

அன்னதானக் கந்தன் ஆலயத்தின் அருகினிலே
ஆச்சிரமத்தை அமைத்து அங்குவரும் அடியவர்க்கு
அன்னப் பசிபோக்கி ஆறுதலை அளிப்பீரே
ஆதரவு அற்றவர்க்கும் துணையாய் இருப்பீரே!
இன்னும் பல சேவைகளை இனிதே புரிகின்ற,
இதயங்கள் கவர்கின்ற மோகனதாஸ் சுவாமிகளே
பொன் மனத்தவரே! நீவிர் பிறந்த பொன் நாளிதனில்
புகழ் மாலை சூட்டியுமே போற்றுகின்றோமே.

இன, மத, பேதங்கள் பார்க்காதுமே என்றும்
எல்லோர்க்கும் சமமான சேவைகள் செய்வீரே!
தினமிங்கு திட்டமிட்டுப் பணிகள் புரிவீரே!
திக்கெட்டும் சென்று அதற்காக உழைப்பீரே!
மனங்களில் ஆன்மீக உணர்வை ஊட்ட
மாதாந்த சஞ்சிகையாம் "ஞானஒளி" தருவீரே
மனமார உமை நாமும் வாழ்த்துகின்றோமே!
மங்களங்கள் பொங்கி நீடூழி வாழியவே!

எல்லாமே இறைவன் செயல் என்று கூறியுமே,
ஏற்ற பணிகள் பலவும் என்றென்றும் செய்வீரே!
சொல்வதைச் செயல்களிலே செய்து முடிப்பவரே!
சொந்தங்களாய் அனைவரையும் கருதி நடப்பவரே

*உன்னிடம் உறுதியான தைரியமிருப்பின் வாய்மையும் இருக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாச் சமய விழாக்களையுமே நடாத்தி
என்றும் சமய விழிப்புணர்வை ஊட்டுவீரே!
கல்வி கற்போர்க்கும் சேவைகள் செய்பவரே!
கந்தன் அருளோடு நீடுழி வாழியவே!

மலையகத்து மக்களுக்கும் சேவைகளைச் செய்யும்
மனத்தினராய் மாதாந்தம் அங்கும் சென்று
கலை, கல்வி வளர்வதற்கு ஊக்கம் கொடுப்பீரே!
கற்ற வளவாளரொடு அங்கு சென்று
தலையாய கல்விப் பணிசெய்து வருவீரே
தன்னலம் கொள்ளாது என்றும் உழைப்பீரே
விலை மதிப்பே இல்லா நற்சேவைகள் செய்கின்ற
வித்தகரே! உத்தமரே! நீடு வாழி!

பட்டங்கள் பதவிகட்காய் பலரும் அலைகையிலே
பட்டங்கள் உமைத் தேடி வந்ததனைக் கண்டோம்
இட்டமுடன் யாழ் நகரசபையும் உமக்கு
ஏற்றமிகும் யாழ் விருது தரவும் கண்டோம்
மட்டற்ற மகிழ்ச்சியினை நாம் அடைந்தோம்
மனங் குளிர்ந்தே உமைப் பாடுகின்றோம்
எட்டுத் திசையும் உங்கள் புகழ் பரவ
ஏறுமயிலோனை வேண்டியுமே வாழ்த்துகின்றோம்.

---

## துணிச்சல் இன்றி சாதிக்க முடியாது

உன்னால் எல்லாருக்கும் உதவி செய்ய இயலாது. ஆனால் பணி செய்ய முடியும். நீ ஒவ்வொருவருக்கும் செய்யும் பணி, இறைவனின் குழந்தைகளுக்கு செய்யும் பணியாகும். இப்படி பணி செய்யும் அரிய வாய்ப்புகூட இறைவனின் அருள் இருந்தால்த்தான் கிடைக்கும்.

சேவை செய்யும்போது அளவுக்குமீறி பெருமைகொள்ளாதே. சேவையை இறைவனுக்கு உகந்த வழிபாடாக எண்ணி செய்ய வேண்டும். நோயாளியின் வடிவிலும், பைத்தியக்காரன் நிலையிலும், ஏழையாகவும், பாவியாகவும் உங்கள் முன் நிற்பவன் அவனே. அவர்களுக்கு சேவை செய்தால், நாம்தான் உய்வடையப் போகிறோம். பிறருக்குச் செய்யும் சிறு உதவியும் நமக்குள் இருக்கும் சக்தியை எழுப்புகிறது. நாளடைவில் இப் பழக்கம் சிங்கத்தின் வலிமையைத் தரும்.

ஒழுக்க நெறியில் நில். வீரனாக இரு. முழு மனத்துடன் வேலை செய். நெறி பிறழா வாழ்க்கையே நல்ல வாழ்க்கை. எல்லையற்ற துணிச்சல் இல்லாவிட்டால் சாதனைகளைப் படைக்க முடியாது.

வலிமையின்மையே ஒருவனின் துன்பத்திற்குக் காரணம். நாம் பலவீனனாக இருப்பதாலேயே பொய்யும், திருட்டும், ஏமாற்று வேலைகளும் இன்னும் நம்மைவிட்டு அகலவில்லை.

*நல்லது நடக்கும் என நம்பு. தீயதை எதிர்கொள்ளத் தயாராய் இரு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநேயம் தேயலாமா?

– திரு சி. நற்குணலிங்கம் அவர்கள் –

மனிதநேயம் என்பது சக மனிதர்களின்மீது பாசம் வைப்பது, அன்பு, கருணை, இரக்கம் காட்டுவது போன்றதாகும். அன்பு, கருணை, இரக்கம், பாசம், அரவணைப்பு, புன்னகை இவைதான் மனிதநேயத்தின் வெளிப்பாடுகளாகும். பிற உயிர்கள்மீது அன்பு இருந்தாலேபோதும் இரக்கமும் கருணையும் இயல்பாகவே கூடவே வந்து ஒட்டிக்கொள்ளும். மனிதர்கள் என்றாலே அவர்களுக்குப் பிரச்சனைகள் இருப்பது இயல்புதான். அந்தப் பிரச்சனைகளைப் பார்த்துவிட்டு அவர்களுக்கு நம்மால் முடிந்த அளவுக்கு உதவிகளைச் செய்யலாம். பசியால் வாடுபவர்களுக்கு உணவு அளிக்கலாம். தாகத்தில் தவிப்பவர்களுக்கு நீர் வழங்குதல் இதுபோன்ற மனிதநேயம்மிக்க செயல்களைச் செய்தால் மனிதருக்குள் ஒற்றுமைநிலை அதிகரிக்கும். உலகில் வாழக்கூடிய முகம் தெரியாத நபர்கள் நம்மைப் பார்த்து சிரிப்பது கூட ஒரு மனிதநேயம்தான். அடுத்தவர்களது குடும்பத்தை மாசில்லாத மனதோடு பார்ப்பது கூட மனிதநேயம்தான். யாரென்று அறியாத மனிதர் துன்பப்படுகின்றபோது உதவி செய்கின்ற அந்த மனம்தான் மனிதநேயம். அதாவது "தன்னுயிர்போல் மன்னுயிரையும் பாவித்தல்" உதவி செய்ய முடியாத பொழுதும்கூட அவர்கள் மனம் ஆறுதல் அடையும்படியாக ஆறுதலான வார்த்தைகள் பேசுவதும் மனிதநேயம்தான். யாரென்று அறியாத ஒருவர் அழும்போது காரணமே இல்லாமல் நம் கண்களும் கசியுமாயின் அதுதான் மனிதநேயம்.

அன்னை தெரேசா, மகாத்மா காந்தி, நெல்சன் மண்டேலா, அப்துல் கலாம் மனிதநேயம் உயர்வாக உள்ளவர்களாக விளங்கியவர்கள். உண்மையான மனிதநேயத்துக்கு விருப்பும் கிடையாது. வெறுப்பும் கிடையாது. மனிதம் என்பது மனிதநேயத்தைக் குறிக்கும் மிக அழகான சொல். மனிதநேயத்துக்கு இணையான பொருளோ, செல்வமோ வேறு எதுவும் இல்லை. மனிதநேயத்துக்கு மிகவும் எடுத்துக்காட்டாக விளங்கும் நூல் திருக்குறளாகும். மனித வாழ்க்கைக்கு அடிப்படையாக இருக்கவேண்டியதே மனிதநேயம்தான். அடுத்தவர்களின் வலிகளை உணர்வுகளால் உணரத்தொடங்கும்போதுதான் பிறக்கிறது மனிதநேயம்.

தமிழர் பாரம்பரியத்தில் வந்தாரை வரவேற்று உபசரித்து, உணவளித்து, இன்சொல் பேசுதல், அன்னதானம், தாகசாந்தி போன்ற உயரிய மனிதநேய விழுமியங்கள் தமிழர் வாழ்வியலில் காணப்படுகின்றன. சுயநலம் இல்லாத பிறர்நலம் பேணுதல் மனிதநேயம். "யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி" என்று 3000 வருடங்களுக்கு முன்பே திருமூலர் திருமந்திரத்தில் மனிதநேயம் தொடர்பான கருத்தியலை பதிவு செய்துள்ளார். சிபிச்சக்கரவர்த்தி புறாவுக்காக தன்னுடலை தானம் செய்தமையும், பாரி மன்னன் முல்லைக்காக தேர் கொடுத்தமையும், பேக மன்னன் மயிலிற்காக போர்வை அளித்தமையும் சங்கம் மருவிய காலத்தின் மனிதநேயத்தின் வெளிப்பாடுகளாகும். "பண்புடையார் பட்டுண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் அதுவின்றேல் மாண்புக்கு மாய்வதுமன்" என்கிறார் வள்ளுவர். மனிதநேயம் மிக்க வர்கள் இன்றும் வாழ்ந்துகொண்டிருப்பதால்த்தான் இவ் உலகம் அழிந்துபோகாமல் இயங்கிக் கொண்டிருக்கிறது.

மனிதம் இல்லாத மனிதரே இல்லை. விலங்குகள்கூட பல நேரங்களில் தம் இனத்துக்காக போராடி தங்களுக்கு மனிதநேயம் இருக்கிறது என மெய்ப்பிக்கும் காட்சிகளை நாம் கண்டிருக்கிறோம். விபத்தில் சிக்கிய மனிதருக்கு ஓடிச்சென்று உதவுவது மனிதநேயம் மிக்கவர்களால்த்தான் முடியும். விபத்து நடந்த இடத்தைச் சுற்றி வெறும் பார்வையாளர்களைத் தான் இன்று அதிகம் காணமுடிகின்றது. பொன்னையும் பொருளையும் மண்ணையும் தேடும் நாம் பல நேரங்களில் மனிதத்தைத் தொலைத்துவிட்டு தொலைத்தது எதுவென்றுகூடத் தெரியாமல் தேடலிலே காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கிறோம். நம் அகம் சார்ந்த தேடல் நிகழும்போது புறம் சார்ந்த மனிதர்களை நினைக்க மறந்துவிடுகிறோம். அகமும் புறமும் சார்ந்ததுதான் வாழ்க்கை. இந்த உலகில் நாம் நம் கண் முன்னால் காணும் ஒவ்வொருவரையும் நேசிக்கவில்லை என்றால் கண்ணுக்குத் தென்படாத கடவுளிடம் எவ்வாறு அன்பைச் செலுத்த இயலும்.

முன்னெல்லாம் பிறந்தநாள் விழாவினை தம் குடும்ப உறுப்பினர்களுடன் கொண்டாடு வதையே விரும்புவார்கள். இப்போதெல்லாம் அந்த நிலை மாறி ஆதரவற்றோர், விடுதிகளில் இருக்கும் குழந்தைகள் ஆகியோருடன் கொண்டாட விரும்புபவர்களும் உள்ளனர். இந்த அளவிற்கு மனிதநேயமானது சிலர் மத்தியில் மாற்றமடைந்துள்ளது. மனிதநேயம் உயர்வாக உள்ள மனிதர்கள் இதயத்தால் யோசித்து புத்தியினால் அதை உணரவும் செய்வார்கள். மனிதநேயம் அற்றவர்கள் மற்றவர்களுடன் அன்பு பாராட்டுவதற்குப் பதிலாக வெறுப்பையும் காழ்ப்புணர்ச்சியையும் உருவாக்குகின்றனர். அதிகாரப்போட்டி, பொருளாதாரப் போட்டி இவைபோன்ற காரணங்களால் மனிதர்கள் நல்லெண்ணங்கள் இல்லாது சண்டையிட்டுக் கொள்ளும் மிருகங்களாக மாறியுள்ளனர். சகமனிதர்களை கொலை செய்தல், பெண்களை துஷ்பிரயோகம் செய்தல் இவை போன்ற மிருகத்தனமான செயற்பாடுகளில் இன்றைய மனிதர்கள் பலர் ஈடுபட்டுவருவது மனவேதனைக்கு உரிய விடயமாகும். மனிதனும் அவ்வப் போது மனிதநேயமும் மயங்கிப்போகிறது.

"உன்மேல் அன்பு செலுத்து சிறுவர்களை நேசி, உன்மீது கோபம் கொண்டோரை அதைவிட நேசி" - அன்னை தெரேசா.

ஒருவரால் இந்த உலகில் தனியாக வாழமுடியாது. ஒவ்வொருவரும் மனிதநேயத்துடன் ஒவ்வொருவருக்கு ஒருவர் உதவியாக இருந்தால்த்தான் இவ் உலகில் வாழ முடியும். மனிதநேயம் என்பது இல்லாமல் இருந்திருந்தால் இவ் உலகம் என்றோ அழிந்திருக்கும். "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்" என்கிறார் வள்ளுவர். அதாவது மனிதர்கள் எனப்படுபவர்கள் பிறப்பினால் யாவரும் சமன் என்பதாகும். உயர்வு, தாழ்வுகள் இல்லாமல் பிற மனிதர்கள்மீது அன்பு பாராட்டும் அந்த உயரிய பண்பு உடையவர்களே உண்மையான மனிதர்கள் ஆவர். அத்தகைய பண்பு இல்லாதவர்களை

*கஷ்டமில்லாமல் வெற்றியில்லை. முயற்சியில்லாமல் பெருமையில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதராகக் கருத முடியாது. நாம் பிறக்கும்போது யார் யார் வந்து பார்த்தார்கள் என நமக்குத் தெரியாது. நாம் இறந்த பின்னர் யார் யார் வந்து போகிறார்கள் என்று நமக்குத் தெரியாமல் இருக்கும்வரை பார்க்கும் மனிதர்களுடன் மனிதநேயத்துடன் பழகுவோம்.

சாலச் சிறந்தவர்களாகவும், ஆளப்பிறந்தவர்களாகவும் ஆக ஏகப்பட்ட போட்டி. வாழப்பிறந்தவர்கள் நாம் மனிதர்களாக வாழ்வதற்குத்தான் போட்டி இல்லை. மனிதநேயம் இல்லாமல் போனால் மழை பொழியா வானமும், மரம் செழிக்கா பூமியும், காதல் இல்லா இயற்கையும் ஏன் தோற்றமளிக்காது? எது எப்போது யார் யாருக்கு என்று தெரியாத உலகில் நம்மில் நிலைத்திருக்கவேண்டியது மனிதநேயம் ஒன்று மட்டுமே. மனிதநேயம் என்கிற தண்ணீர் உம்மிடம் இருந்தால் தாவரம் என்கிற மக்களுக்கு அதைக் கொடுத்து மலர் தரும் வாசம் என்கிற பாசமான மக்களை பெற்றுக்கொள்ளுங்கள்.

சந்திரனில் முதன்முதலாக கால் வைத்ததும் என்ன நினைத்தீர்கள் என்று ஆம்ஸ்ரோங்கிடம் கேட்கப்பட்டபோது அதற்கு அவர் எத்தனையோ இலட்சக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள சந்திரமண்டலத்தில் இடம்பிடித்த மனிதனால் பக்கத்து வீட்டிலிருக்கும் மனிதனது மனதில் இடம்பிடிக்க முடியவில்லையே என்று மனிதநேயம் இல்லா நிலையில் மனிதர்கள் வாழ்வதைச் சுட்டிக்காட்டி வருந்தினாராம். எல்லாவற்றையும் தனதாக்கிக்கொள்ள நினைக்கிற மனிதர்க்கு மனிதனை மனிதனாக பார்க்கத் தெரியவில்லை. மனிதர்கள் மனதில் இடம்பிடிப்பவர்கள்தான் மனிதநேயம் மிக்க மனிதராக இருப்பார்கள். மனிதநேய விதைகளை நாளைய தலைமுறையினரிடம் விதைத்துக்கொண்டே இருந்தால் மட்டுமே மனிதநேயம் வாழும். வான் நிலா தேயலாம் வாழும் தேசத்தில் மனிதநேயம் தேயலாமா? வறட்சி வானிலையில் இருக்கலாம். மனதிற்கு வறட்சி ஏற்படலாமா? மனிதனாய் இருப்போம்! மனிதரை நேசிப்போம்! மனிதத்தை போதிப்போம்! பாதிக்கப்படுகின்ற மனிதர்க்கு உதவுவதே மனிதநேயம்.

ஒருவரை ஒருவர் நேசிக்கும் மனிதநேயம் வளரவேண்டும். அதுவே வேற்றுமை மறையவும், ஒற்றுமை மலரவும் உதவும். மற்றவர்களின் மனதில் நிலைத்து நிற்பதற்கு நல்ல பண்புகளும் செயல்களும்தான் மனிதநேயமாக பார்க்கப்படுகிறது. மனிதநேயம் இல்லாத மனிதர்களை ஒரு பொருளாகத்தான் கருதவேண்டி இருக்கிறது. ஏனென்றால் அதுபோன்றவர்களிடம் உணர்வுரீதியாக எந்தவகையிலும் மாற்றத்தைக் காணமுடியாது. மனிதநேயம் உள்ளவர்கள் அடுத்தவரிடத்தில் இருந்து யோசிப்பவர்கள், மனிதனை மனிதனாக மதிக்கும் மனிதநேயம் மனித குலத்துக்கு நம்பிக்கையைத் தருகிறது.

## குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆகஸ் | 10 | ஆடி | 25 | சனி | மயில்வாகனம் சுவாமிகள் |
| ஆகஸ் | 11 | ஆடி | 26 | ஞாயிறு | சுந்தரமூர்த்தி நாயனார் |
| ஆகஸ் | 31 | ஆவ | 15 | சனி | திருநீலகண்ட சிவாச்சாரியார் |
| செப் | 30 | புர | 14 | திங்கள் | அருணந்தி சிவாச்சாரியார் |

***வேகமாக முடிவு எடுப்பதைவிட விவேகமாக முடிவு செய்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்டாதி மாத வாராந்த நிகழ்வுகள்

06.09.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "அடியார்க்கு எளியன் முருகன்"

வழங்குபவர் :- திரு இ. கிருஸ்ணராஜ் அவர்கள்

(உப அதிபர்)

---

13.09.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

"இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

20.09.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "மகாபாரதம்" (தொடர்)

வழங்குபவர் :- செஞ்சொற் செல்வன் இரா. செல்வவடிவேல் அவர்கள்

(ஆசிரியர்)

---

27.09.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் புரட்டாதி மாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு சிவ. ஆறுமுகசாமி J.P அவர்கள்

மதிப்பீட்டுரை :- திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள்

(ஆசிரியர் – யாழ்ப்பாணக் கல்லூரி)

321ஆவது மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org